20.05.15

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## திண்டுக்கல்லில் மல்லிகைப்பூ ரூ.300

திண்டுக்கல்: திண்டுக்கல் மாவட்டத்தில் தொடர்ந்து மழை பெய்து வருவதால், மல்லிகை விளைச்சல் பாதிக்கப்பட்டு உள்ளது. கிலோ ரூ.300க்கு விற்கப்படுகிறது. திண்டுக்கல் மாவட்டத்தில் நிலக்கோட்டை, சிலுக்குவார்பட்டி, ஏ.வெள்ளோடு, செம்பட்டி, வத்தலக்குண்டு, சாணார்பட்டி, வடமதுரையில் மல்லிகை விளைவிக்கப்படுகிறது. தொடர்ந்து மழை பெய்து வருவதால் விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது. மேலும் திருமணம் உட்பட நிகழ்ச்சிகள் தொடர்ந்து வருவதால் விலை உயர்ந்துள்ளது. கடந்த வாரம், கிலோ ரூ.100க்கு விற்ற மல்லிகைப்பூ நேற்று ரூ.300க்கு விற்றது. திண்டுக்கல் மார்க்கெட்டில் பூக்களின் விலை (கிலோ) : மல்லிகை -ரூ.300, கனகாம்பரம் ரூ.500, சம்பங்கி ரூ.250, செண்டுமல்லி ரூ.40, கோழிக்கொண்டை ரூ.50, பிச்சிப்பூ ரூ.320, அரளி ரூ.90, மரிக்கொழுந்து ஒரு கட்டு ரூ.10.

## ஊட்டியில் குறைந்தது மழை

ஊட்டி: ஊட்டியில் மழை குறைந்துள்ளதால், சுற்றுலா பயணிகளின் கூட்டம் அதிகரித்துள்ளது. காய்கறி கண்காட்சி, வாசனை திரவிய கண்காட்சி, மலர் கண்காட்சிகள் நிறைவு பெற்ற நிலையில், வரும் 23, 24 ஆகிய தேதிகளில், குன்னூர் சிம்ஸ் பூங்காவில், பழக்கண்காட்சி நடக்க உள்ளது. இந்நிலையில், தொடர் மழை பெய்து வந்ததால், சுற்றுலா பயணிகளின் வருகை குறைந்தது. இரு நாட்களாக மழை குறைந்துள்ளதால், பயணிகளின் வருகை அதிகரித்துள்ளது. இதனால்,

மலர் கண்காட்சி அலங்காரங்களை, இம்மாதம் இறுதிவரை நீட்டிக்க, பூங்கா நிர்வாகம் முடிவு செய்துள்ளது.

**பெரியாறு, வைகையில் மழை குறைந்தது**

மதுரை: பெரியாறு, வைகை அணைகளின் நீர்ப்பிடிப்பு பகுதியில் நேற்று போதிய மழை பெய்யவில்லை. மதுரை, திண்டுக்கல், தேனியில் தொடர்ந்து கோடை மழை பெய்து வருவதால் பெரியாறு, வைகை, மஞ்சளாறு, சாத்தையாறு, சண்முகாநதி, மருதாநதி அணைகளின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. சோத்துப்பாறை அணை முழு கொள்ளளவான 126 அடியை எட்டியது. மழை குறைந்தது: பெரியாறு அணைக்கு நீர் வரத்து 566 கன அடியாக இருந்தது. தற்போது 358 கன அடியாக குறைந்தது. நேற்று மழை பெய்யாததால் நீர் மட்டம் உயரவில்லை. 150 கன அடி வெளியேற்றப்படுகிறது. வைகை நீர் வரத்து 946. வெளியேற்றம் 60. சோத்துப்பாறை நீர் வரத்து 150. வெளியேற்றம் 150. மஞ்சளாறு நீர் வரத்து 269. வெளியேற்றம் இல்லை. சாத்தையாறு நீர் வரத்து இல்லை. சண்முகாநதி அணை நீர் வரத்து 6. வெளியேற்றம் இல்லை. மருதாநதி நீர் வரத்து 139. வெளியேற்றம் இல்லை. நீர் மட்டம்: வைகை அணை நீர் மட்டம் 2014 மே 15ல் 30.64 அடியாக இருந்தது. தற்போது 44.29 அடியாக உயர்ந்து உள்ளது.

**ஒகேனக்கல் காவிரியில் நீர்வரத்து அதிகரிப்பு**




ஒகேனக்கல்: தமிழக - கர்நாடக எல்லையில், காவிரி நீர்ப்பிடிப்பு பகுதியில், தொடர் மழை பெய்து வருகிறது; இதனால், ஒகேனக்கல் காவிரியில் நீர்வரத்து அதிகரித்துள்ளது.

கடந்த சில நாட்களாக, காவிரி நீர்ப்பிடிப்பு பகுதியில், தமிழக - கர்நாடக எல்லையில், கனமழை பெய்தது. இதனால், தர்மபுரி மாவட்டம், ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து அதிகரித்து உள்ளது. குறிப்பாக, நேற்று காலை நிலவரப்படி, ஒகேனக்கல் காவிரியாற்றில், வினாடிக்கு, 10,400 கனஅடி தண்ணீர் வந்து கொண்டு இருந்தது. இதையடுத்து, சுற்றுலா பயணிகள் நலன் கருதி, ஒகேனக்கல்லில், ஆண்கள் குளிக்கும் அருவியில், ஒரு பகுதிக்கு பூட்டு போடப்பட்டது. பரிசல் ஓட்டிகள், பரிசல் துறையில் இருந்து பரிசல்களை இயக்காமல்,

**பயனில்லை ! : 5 நாட்கள் தொடர்ந்து பலத்த மழை பெய்தும்... : கோடை**

## விவசாயம் செய்ய தயங்கும் விவசாயிகள்

திருவாடானை: திருவாடானை தாலுகாவில் கடந்த 5 நாட்களாக பலத்த கோடை மழை பெய்தும், இம்மழையை நம்பி விவசாயப்பணிகளை துவக்க விவசாயிகள் தயங்கும் நிலை உள்ளது.

ராமநாதபுரம் மாவட்டத்தின் நெற்களஞ்சியமாக திகழ்வது திருவாடானை தாலுகா. இப்பகுதியில் கடந்தாண்டு அமோக விளைச்சல் இருந்ததால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர். அறுவடை பணிகளை முடித்த விவசாயிகள் தற்போது ஓய்வெடுத்து வருகின்றனர். இந்நிலையில், எந்த ஆண்டும் இல்லாத வகையில் இந்தாண்டு சில 5 நாட்களாக பலத்த கோடை மழை பெய்து வருகிறது.

கோடை காலத்தில் நெல் விவசாயம் செய்ய முடியாவிட்டாலும், மற்ற பயிர்களான உளுந்து, பருத்தி, எள் போன்ற தானியங்களையும், காய்கறி தோட்டங்களையும் அமைக்கலாம். இதற்கு குறைந்த அளவு தண்ணீரே தேவைப்படும். வேளாண்மை துறை அலுவலர்கள் இம் மாதிரியான தானிய வகைகளை பயிரிட ஆலோசனை கூறியும், விவசாயிகள் இதற்கு ஆர்வம் காட்டாமல் உள்ளனர். இந்த கோடை மழையால் கண்மாய், குளங்களில் சிறிதளவு தண்ணீர் தேங்கிஉள்ளது. இது கால்நடைகளின் குடிநீர் தேவைக்கு மட்டுமே பயன்படும். அடுத்த பருவத்திற்கான விவசாய பணிகளை துவக்குவதற்குள் இந்த மழைநீர் முற்றிலும் வற்றிவிடும். இதனால் தற்போது பெய்துள்ள கோடை மழை விவசாயத்திற்கு பயனில்லாமல் போனது.

இது குறித்து தமிழ்நாடு விவசாயிகள் சங்க தாலுகா தலைவர் ராசு கூறுகையில்,

"" திருவாடானை தாலுகாவில் கோடைவிவசாயம் செய்ய பல விவசாயிகள் ஆர்வம் காட்டுவதில்லை. தற்போது உள்ள இடுபொருட்களின் விலை உயர்வு, கூலி என பல்வேறு வகைகளில்

ஏற்படும் செலவுகளால் விவசாயம் செய்யும் விவசாயிகளுக்கு மிகுந்த நஷ்டம் தான் ஏற்படும். கோடைவிவசாயம் செய்தாலும் கால்நடைகளை கட்டுபடுத்த முடியாது. அவற்றாலும் பாதிப்பு ஏற்படும். கோடைவிவசாய பாதிப்புக்கு பயிர் காப்பீடு, மானிய விலையில் உரம், பூச்சி மருந்து போன்ற பல சலுகைளை அரசு அறிவித்தால், கோடை விவசாயம் செய்ய வாய்ப்புண்டு," என்றார்.

காவிரி அருவியில் கொட்டும் நீரின் அழகை கண்டு ரசிக்க முடியாத நிலை ஏற்பட்டதாக, வருத்தத்துடன் தெரிவித்தனர்.

**பலவகை பண்ணையம் பையை நிரப்பும்**



நாட்டின் முதுகெலும்பாக திகழும் விவசாயத்துக்கு நாம் அளிக்கும் முக்கியத்துவம், பிறருக்கு அன்னமிடலுக்கு சமம். புண்ணியத்தை எவ்வித பிரதிபலனும் பார்க்காமல் சேர்ப்பவர்கள் விவசாயிகள். குடும்பத்தோடு விவசாயம் பார்த்து, குறுகிய கால பயிர் மூலம் கொஞ்சம் லாபம் பார்ப்பவர்களுக்கு மத்தியில், ஆண்டு முழுவதும் பலவகை பண்ணையம் மூலம் பயிர் செய்து லாபத்தை அடைந்து வருகிறார், காரைக்குடி அரியக்குடி விவசாயி ஆர்.கருணாநிதி. மொத்தமுள்ள ஐந்து ஏக்கரில், இரண்டு ஏக்கரில் தென்னை நடவு

செய்துள்ளார். இரண்டரை ஆண்டுக்கு முன்பு வைத்த கன்றுகள், இன்று காய்க்கும் தருவாயில் உள்ளன. தண்ணீரை சேமிக்க தென்னைகளுக்கு சொட்டு நீர் பாசன முறையில் பாய்ச்சி வருகிறார். பாத்தி மட்டும் கட்டி பயிர் செய்தால் போதும், தண்ணீரை தவிர எந்த வகை செலவையும் வைக்காது மரவள்ளி கிழங்கு என்கிறார் இவர்.

அவர் மேலும் கூறும்போது: கடந்த 40 ஆண்டாக விவசாயம் செய்து வருகிறோம். தற்போது ஒரு ஏக்கரில் கடலை போட்டுள்ளேன். ஒரு ஏக்கருக்கு 40 மூடை கடலை வரும். ஒரு மூடை ரூ.1,800 வரை விலை போகும். செலவு ரூ.40 ஆயிரம் போக, ஒரு பருவத்துக்கு ரூ.50 ஆயிரம் லாபம் கிடைக்கும்.

கடந்த முறை 500 பப்பாளி கன்று வைத்தேன். மொத்தம் 24 டன் பப்பாளி விளைந்தது. ஒரு கிலோ ரூ.6-க்கு விற்பனையானது. இதில் அதிகம் செலவு கிடையாது. 24 ஆயிரம் ரூபாய் வரை வருமானம் கிடைத்தது. தற்போது 200 பப்பாளி கன்று வைத்துள்ளேன். வைத்த 2வது மாதத்தில் பப்பாளி காய்க்க ஆரம்பித்து விடும். அதன் பிறகு 6 மாதம் காய்ப்பு இருக்கும். தென்னைக்கு சொட்டு நீர் பாசனம் அமைத்துள்ளதால், 24 மணி நேரத்தில் பாய வேண்டிய தண்ணீர், 12 மணி நேரத்தில் பாய்ந்து விடும். இதனால் தண்ணீர் சிக்கனம் உள்ளது.

இவை மட்டுமன்றி, வெண்டை, சோளம், பீர்க்கு, புடலை, அவரை என பல்வேறு வகையான காய்கறி பயிரிட்டு வருகிறேன். காய்கறிகளை பொறுத்தவரை, அன்றன்று செலவுக்கு உதவும். பலா, மா இந்த முறை நன்றாக காய்த்துள்ளது. ஒரு பலாவை அறுத்து சுளையாக விற்றால் ரூ.200 கிடைக்கும். இதில் 400 சுளை வரை இருக்கும். எந்த விவசாயத்தையும் முழு முயற்சியுடன் செய்தால் வெற்றி பெறலாம். நிலம் இல்லை, அதனால் விவசாயம் இல்லை என்பதை விட, இருக்கின்ற நிலத்தில், என்ன ரகம் பயிரிட்டால் வெற்றி பெறலாம், என்பதை

தீர்மானித்து பயிரிட்டால், விவசாயத்தால் யாருக்கும் நஷ்டம் கிடையாது, என்றார்.

இவரை தொடர்பு கொள்ள 99763 67375.

**-செந்தில்குமார், காரைக்குடி.**

**சின்ன செய்திகள்**




இஞ்சி "வரதா' மகத்துவம் : கேரளத்தில் கோழிக்கோட்டிற்கு அருகில் உள்ள இன்சாகல் என்ற இடத்தில் வசிப்பவர் கே.சி.ஜோசப். இவர் கடந்த 30 ஆண்டுகளாக இஞ்சி விவசாயத்தை தொடர்ந்து செய்து வருகிறார். ஆனால் கடந்த 6 வருடங்களாக ஐ.ஐ.எஸ்.ஓரின் "வரதா' இஞ்சி ரகத்தை பயிரிட்டு கணிசமான மகசூலையும் வருமானத்தையும் பெற்றுள்ளார். 40 சென்ட் நிலத்தில் பயிரிட்டு 5000 கிலோ இஞ்சியை அறுவடை செய்துள்ளார். இந்தியாவில் பல பாகங்களிலும் உள்ள புதுமையை விரும்பும் விவசாயிகள் இதனைப் பயிர்செய்து சாதனை படைத்து வருகின்றனர். இது ஜிஞ்சர் கேண்டி தயாரிப்பதற்கு ஏற்றதாகும். கே.சி.ஜோசப்பின் தொடர்பு முகவரி : Shri Joseph Inchakkal, Kavakattu, Venappara (Po), Omassery Via, Kozhikode, Kerala. Mob: 0964 536 6284.

மிளகு நாற்றங்கால் : நாற்றங்காலில் பாலிதீன் பைகளில் வைக்கப்பட்டுள்ள தண்டுப் பதியன்களுக்கு தேவைக்கேற்ப தண்ணீர் ஊற்ற வேண்டும். கோடைமழை கிடைத்தவுடன் போதிய சூரிய

வெளிச்சம் கிடைக்க ஏதுவாக நாற்றங்காலின் நிழலை குறைக்க வேண்டும்.தோட்ட பராமரிப்பு : ஒரு கொடிக்கு 10 கிலோ தொழுஉரம் அல்லது கம்போஸ்டு இட வேண்டும். சென்ற வருடத்தில் சுண்ணாம்பு இடும் பணி மேற்கொள்ளவில்லையெனில் கொடிக்கு 600 கிராம் சுண்ணாம்பு தூர் பகுதியைச் சுற்றி இடவேண்டும். டிரைகோடெர்மா ஹேசியானம் மற்றும் சூடோமோனஸ், புளோரசன்ஸ் ஐ மண்ணில் இடுவதால் வாடல் நோயைக் கட்டுப்படுத்த முடியும். ரசாயன பூசனக் கொல்லி கட்டுப்பாட்டு முறையைக் கடைபிடிக்கும் போது, மழை கிடைத்தவுடன் எல்லா கொடிகளுக்கும் 0.2 சத காப்பர் ஆக்ஸி குளோரைடு கரைசலை கொடிக்கு 5-10 லிட்டர் என்ற அளவில் கொடியின் தூர் பகுதியில் 45-50 செ.மீ. சுற்றி ஊற்ற வேண்டும். கொடியின் மேல் 1 சத போர்டோ கலவையைத் தெளிக்க வேண்டும். வெனிலா : பருவமழை தாமதமானால் தேவைக்கேற்ப செடிகளுக்கு நீர் பாய்வதைத் தொடர வேண்டும். ஒரு கொடிக்கு 1 கிலோ மண்புழு உரம் அல்லது 2 கிலோ தொழு உரம் அல்லது 2 கிலோ கம்போஸ்டு இட்டு அங்ககப் பொருட்களைப் பயன்படுத்தி மூடாக்கு இட வேண்டும். பூக்கள் மலர்வது தொடங்குமேயானால் காலை 6 மணி முதல் மதியம் 12 மணி வரை கை கொண்டு மகரந்த சேர்க்கை செய்வதைத் தொடர வேண்டும். பீட்ரூட் விலை விபரம் : தமிழ்நாட்டில் பீட்ரூட் முக்கியமாக நீலகிரி மாவட்டம், திருப்பூர், தேனி மாவட்டத்தில் சமவெளியில் குறிப்பிட்ட வட்டாரங்களில் பயிரிடப்படுகிறது. மலையில் சாகுபடி செய்யப்படும் பீட்ரூட்டிற்கு தமிழக நுகர்வோர் மத்தியில் அதிக முக்கியத்துவம் வழங்கப்படுகிறது. பீட்ரூட்டின் விலை மே-ஜூன் 2015 மாதங்களில் அதிகரிக்க வாய்ப்புள்ளது. கேரட்டின் சராசரி பண்ணை விலை கிலோவிற்கு ரூ.15 முதல் ரூ.20 வரை பீட்ரூட் பிறகு கிலோவிற்கு ரூபாய் 12 முதல் 15 வரை இருக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில் பீட்ரூட் உழவர்கள் சாகுபடியை மார்ச் - ஏப்ரல் 2015

மாதங்களில் எடுக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றனர். கத்தரியில் காய்ப்புழுவைக் கட்டுப்படுத்த : அசுவினி, இலைப்பேன் ஆகியவற்றை கட்டுப்படுத்த புளித்த மோர்க் கரைசலை, பூச்சி விரட்டியுடன் சம அளவில் கலந்து தெளிக்கலாம். காய்ப்புழுக்களைக் கட்டுப்படுத்த அக்னி அஸ்திரத்துடன், தலா அரை கிலோ பச்சை மிளகாய், இஞ்சி, பூண்டு ஆகியவற்றை அரைத்துக் கலந்து தெளிக்க வேண்டும். மேலும் தண்டுப்புழு, காய்ப்புழு ஆகியவற்றை கட்டுப்படுத்த இனக்கவர்ச்சிப்பொறி, விளக்குப்பொறி ஆகியவற்றைப் பயன்படுத்தலாம். தொடர்புக்கு : நாகராஜன், அலைபேசி : 99654 63999.

**- டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.**

**தேசிய விதை ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையம்**

இந்திய அரசின் விவசாயம் மற்றும் கூட்டுறவு அமைச்சக நிறுவனமான இது. விதையை ஆராய்ச்சி செய்ய, சான்று வழங்க, பயிற்சி தர உத்தரபிரதேசம் மாநிலத்தில் உள்ள மாண்புமிகு பிரதமரின் தொகுதியான வாரணாசியில் அமைக்கப்பட்டுள்ளது. விதையை தரமாக தயாரிக்க தரத்தை உயர்த்த இது பாடுபடுகிறது.சிறந்த தர கட்டுப்பாடு ஆய்வகத்தை தன்னகத்தே கொண்டுள்ளது. ஒரே மாதிரியான தரத்துடன் இந்திய அளவில் தரமான விதையை உற்பத்தி செய்கிறது. விதை ஏற்றுமதிக்கு ஏற்பாடு செய்கிறது. விதையை உற்பத்தி செய்து விற்பனை செய்வோருக்கு பயிற்சி அளிக்கிறது (இலவசம்). விதை சான்றளிப்பு / மார்க்கெட்டிங், எண்ணெய்வித்து மற்றும் சிறு தானிய தரமான தயாரிப்பு தொழில்நுட்பம். விதைகளை புதிய முறையில் ஆய்வு செய்தல். விதை தரத்தை சோதித்தல். ஒருங்கிணைந்த விதை மேம்பாடு, அறுவடை (முன் மற்றும் பின்) விதை தர தொழில்நுட்பம். அகில உலக விதை வாணிபம். விதைகளை சோதனை செய்ய, பயிற்சி பெற, ஏற்றுமதி ஆலோசனை

பெற, தமிழக விவசாயிகள் இந்நிலையத்தை அணுகலாம். ஒரே மாதிரியான, தரமான விதைகளை தயாரித்து, அதன் மூலம் உற்பத்தியை பெருக்குவதே இந்நிலைய நோக்கமாகும். முதலில் அனுமதி பெற்று நேரில் சென்று பயிற்சியும், ஆலோசனையும் பெற்று பயன் பெறலாம். முழு விபரம் பெற, பயிற்சி பெற: Sri R.K.Trivedi, Director, National Seed Research and Training Centre, Govt. of India, G.T.Road, Varanasi, Utterpradesh. Ph: 0542 237 0222. email : dirnsrtcup@nic.in, www.nsrtc.nic.in.

- எம்.ஞானசேகர், தொழில் மற்றும் விவசாய ஆலோசகர், 93807 55629.

சென்னை விமான நிலையம் பின்புறம் உள்ள கவுல்பஜார் பகுதிகளில், மல்லிகை பயிரிடப்படுகிறது. தற்போது மல்லிகை பூ பருவம் என்பதால், விளைந்த பூக்களை பறிக்கும் பெண்கள்.



**தென்னையில் இருந்து பதநீர் இறக்குவது எப்படி? பொள்ளாச்சியில் கேரள, கர்நாடக அதிகாரிகள் ஆய்வு**

பொள்ளாச்சி : பொள்ளாச்சி அருகே தப்பட்டை கிழவன் புதுாரில், விவசாயி தர்மலிங்கம் தோட்டத்தில், கர்நாடக அரசின் வரித்துறை அதிகாரி சம்புதயாளா மீனா, தோட்டக்கலைத்துறை இயக்குனர் சடாக்ஷவரி சாமி, கொச்சின் தென்னை வளர்ச்சி வாரிய துணை இயக்குனர் ேஹமச்சந்திரன், சென்னை தென்னை வளர்ச்சி வாரிய கள அலுவலர் பரமசிவம் ஆகியோர் பதநீர் இறக்கும் விபரங்கள் குறித்து, விவசாயிகளிடம் கேட்டறிந்தனர். தென்னை மரத்திலிருந்து இறக்கப்படும் பதநீரை பயன்படுத்தி, கருப்பட்டி வெல்லம் தயாரிப்பது குறித்த சந்தேகங்களை கேட்டறிந்தனர்.

கொச்சின் தென்னை வளர்ச்சி வாரிய இணை இயக்குனர் ேஹமச்சந்திரன் கூறியதாவது: கேரளாவில் விவசாயிகளுக்கு ஆதாயம் கிடைக்கும் வகையில், பதநீர் இறக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. ஒரு தென்னை மரத்திலிருந்து மாதம், 2,500 ரூபாய் வரை சம்பாதிக்க முடியும். இந்த பதநீரில் சத்துள்ளது. சர்வதேச சந்தையில் நல்ல வரவேற்பு உள்ளது. கருப்பட்டி வெல்லமாகவும் தயாரிக்கலாம். உரிய நேரத்தில் இறக்குவதால் கள்ளாக மாறாது. கேரள அரசு அனுமதி வழங்கியுள்ளது. இவ்வாறு, அவர் கூறினார்.

**பி.ஏ.பி., பாசன நிலங்களுக்கு ஆண்டு முழுவதும் தண்ணீர்**

திருப்பூர் : பி.ஏ.பி.,பாசன திட்டத்தின் கீழ், கோவை, திருப்பூர் மாவட்டத்திலுள்ள, 3.77 லட்சம் ஏக்கர் நிலங்கள் பயன்பெற்று வருகின்றன. நான்கு மண்டலங்களாக பிரிக்கப்பட்டு, சுழற்சி முறையில் ஆறு மாதம் பாசனத்திற்கு தண்ணீர் வினியோகிக்கப்படுகிறது. இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை, 68 நாள் தண்ணீர் வினியோகிக்கப்பட்டு

வருகிறது. தொகுப்பு அணைகளில் சேகரிக்கப்படும் தண்ணீர், திருமூர்த்தி அணையிலிருந்து, 124 கி.மீ.,நீளமுள்ள பிரதான கால்வாய் வழியாக பாசனத்திற்கு வழங்கப்படுகிறது. பிரதான கால்வாயிலிருந்து, பகிர்மான கால்வாய்கள் மூலம் பாசன நிலத்திற்கு தண்ணீர் செல்கிறது.மண் வாய்க்கால், ஆவியாதல், போதிய அழுத்தம் இல்லாத தண்ணீர், நீளமான பகிர்மான கால்வாய்கள், ஒரு மண்டல பாசனத்திற்கு திறக்கப்படும் நீரை வேறு மண்டல பாசன நிலத்திற்கு மாற்றுதல், தண்ணீர் திருட்டு உள்ளிட்ட பல்வேறு காரணங்களினால் அதிகளவு தண்ணீர் விரயமாகிறது.இதற்கு தீர்வு காணும் வகையில், பிரதான கால்வாயிலிருந்து, குழாய்கள் மூலம் நேரடியாக விவசாய நிலங்களுக்கு குழாய்களில் தண்ணீர் கொண்டு செல்வது குறித்த, ஆய்வு பணிகளை துவக்க பி.ஏ.பி., அதிகாரிகள் திட்டமிட்டுள்ளனர்.

பி.ஏ.பி., அதிகாரிகள் கூறுகையில், 'நுண்நீர் பாசன முறையில், பி.ஏ.பி.,திட்டத்தில் பயன்பெறும் நிலங்களுக்கு, நேரடியாக குழாய்கள் மூலம் பாசன நீர் வழங்க சோதனை முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. விரிவான திட்ட அறிக்கை, அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. திட்டம் வெற்றி பெற்றால், மொத்தமுள்ள, 3.77 லட்சம் ஏக்கர் நிலங்களுக்கும், ஆண்டு முழுவதும் தண்ணீர் வழங்க முடியும்' என்றனர்.

**கொப்பரை உற்பத்தி துவக்கம்**

பொங்கலூர் : மழை ஓய்ந்துள்ளதால், கொப்பரை உற்பத்தி மீண்டும் துவங்கியுள்ளது. கொப்பரை உற் பத்திக்கு வறண்ட வானிலையும், நல்ல வெப்பமும் தேவைப்படுகிறது. மழை காலத்தில் கொப்பரை அழுகிவிடும். கடந்த ஒரு வாரமாக தொடர் மழை பெய்ததால், கொப்பரை உற்பத்தி தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. இதனால், தோப்புகளிலும் தேங்காய் கொள்முதல் செய்யப்படாமல் தேக்கமடைந்தது. தேங்காய் பறிக்க முடியாமல், மரம் ஏறும் தொழிலாளர்களும் முடங்கி கிடந்தனர்.இப்போது

மழை சற்று ஓய்ந்து, வெயில் அதிகரித்துள்ளது. இதனால், ஒரு வார காலமாக நின்று போயிருந்த கொப்பரை உற்பத்தி, மீண்டும் துவங்கியது. கடந்த வாரத்தில் உற்பத்தி இல்லாததால், கொப்பரை கிலோ 89 ரூபாய்க்கு விற்றது. தற்போது உற்பத்தி துவங்கியுள்ளதால், விலை இறங்குமுகமாக உள்ளது. நேற்று, ஒரு கிலோ முதல் தரம் 87 ஆகவும், இரண்டாம் தரம் கிலோ 86 ஆகவும் இருந்தது.கொப்பரை விலை குறைந்ததால், தேங்காய் விலையும் சரிய ஆரம்பித்துள்ளது. முன்பு ஒரு காய் சராசரியாக 12 ரூபாய்க்கு தோப்புகளில் கொள்முதல் செய்யப்பட்டது. தற்போது, 11 ரூபாயாக கொள்முதல் செய்யப்படுகிறது.

**கூடுதல் மகசூல் பெற விவசாயிகள் புது முயற்சி: 'அங்கூர்சோனா' ரகத்திற்கு வரவேற்பு**

பொன்னேரி: கூடுதல் மகசூல் பெறுவதற்காக, மகாராஷ்டிரா வரவான 'அங்கூர்சோனா' நெல் ரகத்தை பயிரிடுவதில், மீஞ்சூர் ஒன்றிய விவசாயிகளிடையே ஆர்வம் அதிகரித்து, நவரை பருவத்தில், 450 ஏக்கரில், பயிரிட்டு புதிய முயற்சியில், ஈடுபட்டு உள்ளன.

மீஞ்சூர் ஒன்றியத்தில், 26 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில், நெல் பயிரிடப்பட்டு வருகிறது. சின்னகாவணம், மேட்டுபாளையம், தேவராஞ்சேரி உள்ளிட்ட பகுதிகளில், நவரை, குறுவை, சொர்ணவாரி என, ஆண்டுக்கு மூன்று முறை விவசாயம் மேற்கொள்ளப்படுகிறது. ஒவ்வொரு பருவத்திற்கும், டி.கே.எம்., 9, டி 43, ரூபாலி உள்ளிட்ட நெல் ரகங்களை பயிரிடுகின்றனர். தற்போது, மேற்கண்ட கிராம விவசாயிகள், புதிய ரக நெல் பயிரிடுவதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

**மகாராஷ்டிரா வரவு:** நவரை பருவத்தில், மகாராஷ்டிரா மாநில வரவான 'அங்கூர்சோனா' என்கிற புது ரக நெல், பயிரிட்டு உள்ளனர். இது ஆந்திராவில், 'எர்றமல்லி' என்கிற பெயரில், விதை நெல் விற்பனை செய்யப்படுகிறது. புதிய வரவு ரகத்தை பயிரிடுவதில், விவசாயிகள் இடையே ஆர்வம் அதிகரித்து உள்ளது. நெல்லின் உள்பகுதியில், அரிசியின் மேற்பரப்பு சிவப்பாக இருப்பதால், இந்த பெயர் வழக்கத்தில் உள்ளது. இது சன்னரக வகையைச் சார்ந்தது. மீஞ்சூர் ஒன்றியத்தில், 450 ஏக்கர் பரப்பளவில், இந்த புதிய வகை நெல் பயிரிடப்பட்டு உள்ளது. இந்த வகை பயிர், நவரை பருவத்தில் நன்கு வளரும் என்பதால், தற்போது, மேற்கண்ட கிராமங்களில், முதன் முறையாக இந்த வகை நெல்லை பயிரிட்டு உள்ளனர். மஞ்சகரணை, ஆண் டார்குப்பம, பஞ்செட்டி, உள்ளிட்ட இடங்களிலும், இந்த புது ரக நெல் பயிரிடப்பட்டு உள்ளது.

**நோய் எதிர்ப்பு சக்தி:** புதிய ரக நெல் பயிரிட்டு உள்ள விவசாயி சின்னகாவணம் தாரக ராமன் கூறுகையில், "கூடுதல் மகசூல் கிடைப்பதுடன், விலையும் எதிர்பார்த்த அளவில் இருப்பதை அறிந்தேன். அதனால், இப்பகுதியில், முதன்முறையாக, இந்த ரக நெல்லை பயிரிட்டு உள்ளோம்," என்றார் இதுகுறித்து, பெயர் வெளியிட விரும்பாத வேளாண் துறை அதிகாரி ஒருவர் கூறுகையில், "இந்த வகை நெல்லில் நோய் எதிர்ப்பு சக்தி அதிகமாக இருக்கிறது. நெற்பயிர்கள் சாயாமல் வளர்கின்றன. இதனால், இந்த புதிய வகை நெல் பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம் காட்டுகின்றனர்," என்றார்.

**விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

திருவள்ளூர்: திருவள்ளூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம், வரும் 22ம் தேதி நடக்கிறது. திருவள்ளூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர் நாள்

கூட்டம், வரும் 22ம் தேதி, காலை 11:00 மணிக்கு, ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் நடைபெற உள்ளது. ஆட்சியர் வீரராகவ ராவ் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில், மாவட்டத்தில் உள்ள வேளாண்மை, தோட்டக்கலை, வருவாய், மின்வாரியம், கூட்டுறவு, பொதுப்பணி, வேளாண்மை பொறியியல், மீன்வளம், கால்நடை பராமரிப்பு, வேளாண் விற்பனை மற்றும் வணிகம், மற்றும் இதர வேளாண் சார்ந்த துறை அலுவலர்கள் கலந்து கொண்டு, விவசாயிகள் குறைகளுக்கு தீர்வு காண உள்ளனர். எனவே, இம்மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள், மேற்படி கூட்டத்தில் கலந்து கொண்டு பயன்பெற வேண்டுமாறு, ஆட்சியர் வீரராகவ ராவ் கேட்டுக் கொண்டுள்ளார்.

## பானாம்பட்டு விவசாயிகள் நெல் சாகுபடியில் ஆர்வம்

விழுப்புரம்: விழுப்புரம் அடுத்த பானாம்பட்டு பகுதி விவசாயிகள், அதிகளவில் நெற்பயிர் சாகுபடி செய்துள்ளனர். கோடை காலங்களில் வெயில் சுட்டெரிக்கும் தருணத்தில் இந்தாண்டு சீசன் மாறி மழை பெய்து வருகிறது. இதனால் பொதுமக்கள் மட்டுமின்றி விவசாயிகளும் மிகுந்த மகிழ்ச்சி அடைந்துள்ளனர். விழுப்புரம் அடுத்த பானாம்பட்டு, ஆனாங்கூர் ஆகிய பகுதிகளில் விவசாயிகள், பல்வேறு ரகங்களில் நெற் பயிர்களை அதிகளவு சாகுபடி செய்துள்ளனர். பயிரிட்ட 120 நாட்களில் அறுவடைக்கு தயாராகும், வெள்ளக்கார், சிவப்புகார், நெல் ரகம் 37, 45 வகைகள் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

இப்பகுதியில் 500 ஏக்கர் பரப்பளவில் நெல் பயிர்கள் சாகுபடி செய்யப்படுகின்றது. நெற்பயிர் சாகுபடிக்கு, ஏக்கருக்கு 15 ஆயிரம் ரூபாய் வரை செலவு செய்கின்றனர். கடந்தாண்டு அதிகள வில் வெள்ளரி சாகுபடி செய்த இப்பகுதி விவசாயிகள், இந்தாண்டு மாறியுள்ள சீதோஷண நிலையை பயன்படுத்தி நெல் சாகுபடிக்கு மாறி விட்டனர்.

கடந்த சில தினங்களாக பெய்துவரும் தொடர் மழையால், நெற் பயிர்கள் செழித்து வளர்ந்துள்ளன. கோடை மழை பெய்துள்ளதால், நெல் பயிரிட்டுள்ள விவசாயிகள் உற்சாகம் அடைந்துள்ளனர்.

## புடலங்காய் அளவில் வளர்ந்த முற்றின வெள்ளரிக்காய்கள்

அவலூர்பேட்டை: வளத்தி அருகே முற்றின வெள்ளரிக்காய்கள் சுரைக்காய், புடலங்காய் அளவில் வளர்ந்துள்ளது. மேல்மலையனூர் ஒன்றியம், வளத்தி அடுத்த வேட்டைக்காரன் பட்டி கிராமத்தை சேர்ந்த முருகேசன் எனும் விவசாயி 10 சென்ட் அளவில் வெள் ளரி பயிரிட்டிருந்தார். இரண்டு மாத பயிரான இதற்கு நான்கு நாளைக்கு ஒரு முறை தண்ணீர் பாய்ச்சி, தினசரி 25 கிலோ அளவிலான வெள்ளரி பிஞ்சுகளை தோட்டத்திலிருந்து பறித்து வருகிறார். இதை கோயம்பேடு மார்க்கெட்டிற்கு விற்பனைக்காக தினசரி அனுப்பி வருகின்றனர்.பிஞ்சு காய் கிலோ 10 ரூபாய் முதல் 20 ரூபாய் வரையில் விலை போகிறது. இந்நிலையில் கடந்த சில தினங்களாக இவரது தோட்டத்தில் வெள்ளரிக்காய்கள் பறிக்கவில்லை. இந்த இடைப்பட்ட நாட்களில் அளவில் பெரிதாக சுரைக்காய், புடலங்காய் போல் பார்ப்பதற்கு அளவில் பெரியதாக தெரிகிறது. இதை பொதுமக்கள் பலரும் பார்த்து செல்கின்றனர்.

## சிறு தானியத்தில் உணவு பொருள் தயாரிப்பு குறித்து மே 28ல் பயிற்சி முகாம்

பனமரத்துப்பட்டி: சந்தியூர் வேளாண் அறிவியல் நிலையத்தில், கம்பு,சோளம், ராகி உள்ளிட்ட சிறுதானியத்தில் இருந்து, லட்டு, தோசை மாவு, பிஸ்கெட் உள்ளிட்ட பொருட்கள் தயாரிப்பது குறித்த பயிற்சி, வரும், 28ம் தேதி நடக்கிறது.
சந்தியூர் வேளாண் அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் ஸ்ரீராம் கூறியதாவது:

சிறுதானியத்தில், அதிக வைட்டமின், தாது உப்பு உள்ளது. உடலுக்கு தேவையான கால்சியம், பாஸ்பரஸ் மற்றும் நார்ச்சத்து நிறைந்துள்ளது. கம்பு, சோளம், ராகி, சாமை, பணி விரகு உள்ளிட்ட சிறுதானியங்களில் இருந்து, மதிப்பு கூட்டும் பொருளாக, லட்டு, பிஸ்கெட், தோசை மாவு, ராகி மால்ட், முறுக்கு, குக்கீஸ் உள்ளிட்ட உணவு பொருட்கள் தயாரிப்பது குறித்து, வரும், 28ம் தேதி, ஒரு நாள் பயிற்சி வழங்கப்படும். பயிற்சி கட்டணமாக, 300 ரூபாய் செலுத்த வேண்டும். சிறு தானியங்களில் தயாரிக்கப்படும் உணவு பொருட்களுக்கு, பொதுமக்களிடம் நல்ல வரவேற்பு உள்ளது. விவசாயிகள், சுய உதவி குழு மகளிர், தொழில் முனைவோர், 0427 - 2422550 எண்ணில் தொடர்பு கொண்டு, தங்களது பெயரை முன் பதிவு செய்ய கொள்ள வேண்டும். இவ்வாறு, தெரிவித்தார்.

## ரூ.30 லட்சத்திற்கு மஞ்சள் வர்த்தகம்

ராசிபுரம்: நாமகிரிப்பேட்டை வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், நேற்று நடந்த ஏலத்தில், 725 மூட்டை மஞ்சள், 30 லட்சம் ரூபாய்க்கு ஏலம் போனது.
தமிழகத்தில், ஈரோட்டுக்கு அடுத்தபடியாக, நாமகிரிப்பேட்டையில் மஞ்சள் மண்டிகள் அதிகம் உள்ளது. ஒவ்வொரு வாரமும், செவ்வாய்கிழமை, நாமகிரிப்பேட்டை வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் ஏலம் நடக்கும். தனியார் மஞ்சள் மண்டிகள் உள்பட, நாமகிரிப்பேட்டை, முள்ளுக்குறிச்சி, பேளுக்குறிச்சி, மங்களபுரம், மெட்டாலா மற்றும் சேலம் சுற்று வட்டார பகுதிகளில் உள்ள விவசாயிகள், தங்கள் விளை நிலத்தில் சாகுபடி செய்துள்ள மஞ்சளை, அறுவடை செய்து விற்பனைக்கு கொண்டு வருவர். மசாலா தயாரிக்கும் நிறுவனங்கள் நேரடியாக வந்து மஞ்சளை வாங்கி செல்கின்றனர். அதன்படி நேற்று, நடந்த ஏலத்தில், 65 கிலோ கொண்ட,

725 மூட்டைகள் விற்பனைக்கு கொண்டுவரப்பட்டது. அதில், விரலி ரகம், குவிண்டாலுக்கு அதிக பட்சம், 9,199க்கும், குறைந்த பட்சம், 6,812 ரூபாய்க்கு ஏலம் போனது.
உருண்டை ரகம் மஞ்சள், அதிக பட்சம், 7,809க்கும், குறைந்த பட்சம், 6,689 ரூபாய்க்கும் ஏலம்போனது. அதேபோல், பனங்காலி ரகம், அதிக பட்சம், 16 ஆயிரத்து, 889, குறைந்த பட்சம், 7,070 ரூபாய்க்கும் ஏலம் போனது. மொத்தமாக, நேற்று ஒரே நாளில், 725 மூட்டை மஞ்சள், 30 லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது.

**ராமக்காள் ஏரியில் தண்ணீர் வரத்து அதிகரிப்பு : தொடர் மழையால் விவசாயிகள் மகிழ்ச்சி**

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில் பெய்து வரும் தொடர் கோடை மழையால், ராமக்காள் ஏரி உள்ளிட்ட ஏரி மற்றும், அணைகளில் தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

தர்மபுரி மாவட்டத்தில், கடந்த, பத்தாண்டுகளாக, போதிய பருவமழை இல்லாமல் விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் கடும் அவதியடைந்து வந்தனர். இந்நிலையில், இந்தாண்டு கோடைக்கு முன்பே, பிப்ரவரி மாதம் முதல், வெயில் கொளுத்தியது. இதனால், பாசனத்துக்கு போதிய தண்ணீரின்றி பயிர்கள் காய்ந்து வந்ததால், விவசாயிகள் கவலை அடைந்தனர். மேலும், பொதுமக்களுக்கு குடிநீர் தட்டுப்பாடு மற்றும் கோடை வெப்பத்தால் நோயினால் பாதிக்கப்பட்டு வந்தனர். இந்நிலையில், விவசாயிகள் மற்றும் பொதுமக்களின் கவலையை போக்கும் விதமாக, ஏப்ரல் மாத மத்தியில் இருந்து, கோடை வெயிலுக்கும் மத்தியில், மழை பெய்து வருகிறது.

தொடர் மழையால், விவசாயிகள், சித்திரை சாகுபடிக்கு தயாராகி வந்தனர். மாவட்டத்தில், சின்னாறு அணை, தொப்பையாறு, நாகவதி, ஈச்சம்பாடி உள்ளிட்ட அணைகளுக்கு நீர் வரத்து அதிகரித்தது.

இதேபோல், தர்மபுரி ராமக்காள் ஏரி, அன்னசாகரம் ஏரி, லளிகம் ஏரி உள்ளிட்ட ஏரிகளுக்கும் தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளது.

மேலும், பொதுப்பணித்துறை கட்டுப்பாட்டில் உள்ள, 74 ஏரிகளில், பெரும்பாலான ஏரிகளில், 50 சதவீதத்திற்கும் மேலாக தண்ணீர் தேங்கியுள்ளது. இதேபோல் பஞ்சாயத்து கட்டுப்பாட்டில் உள்ள, சிறிய மற்றும் நடுத்தர ஏரிகளும், ஓரளவிற்கு தண்ணீர் வரத்து அதிகரிப்பால், நிரம்பி வருகிறது. கோடை காலம் முடிய, இன்னும் சில நாட்களே உள்ள நிலையில், தென்மேற்கு பருவமழை தொடங்க உள்ளது. இதனால், இந்தாண்டு, தர்மபுரி மாவட்டத்தில் உள்ள அணைகள் மற்றும் ஏரி, குளங்கள் நிரம்பிய நிலையில் இருக்க வாய்ப்புள்ளது. இந்த வாய்ப்பை பயன்படுத்தி விவசாயிகள், சாகுபடி பணிகளை தீவிரப்படுத்தி வருகின்றனர்.

**மலைப்பகுதியில் கனமழை**

அந்தியூர்: அந்தியூர் அடுத்த பர்கூர் மலைப்பகுதி கிழக்கு மலையில் உள்ள தேவர்மலை, ஈரெட்டி, மடம், பெஜலட்டி மேற்குமலையில், தாளக்கரை, செங்குளம், கொங்காடை, தம்புரெட்டி, ஒன்னகரை மற்றும் துருசனாம்பாளையம், சுண்டப்பூர், சோளகணை உள்ளிட்ட மலையின் பல்வேறு பகுதியில், நேற்று முன்தினம் விடிய விடிய மழை பெய்தது. பர்கூர் மலை வனப்பகுதியில் யானை, காட்டுப்பன்றி, மான் போன்ற விலங்குகள், அதிக அளவில் உள்ளது. வனவிலங்குகளின் தாகம் போக்க அமைக்கப்பட்டிருந்த வனக்குட்டைகள், வற்றிப்போனது. இதனால் யானை உள்ளிட்ட விலங்குகள், தண்ணீர் தேடி ஊருக்குள் புகுந்து, மனிதர்களை தாக்கி, விளை நிலங்களை சேதப்படுத்தியது. இந்நிலையில், கடந்த சில நாட்களாக மழை பெய்தாலும், நேற்று முன்தினம் பெய்த கனமழையால் விலங்குகளுக்கு நீர் ஆதாரமாக விளங்கும் வனக்குட்டைகளுக்கு, ஓரளவு தண்ணீர் வந்துள்ளதால்,

யானைகள் ஊருக்குள் புகும் அபாயம் குறையும், என மலைவாழ் மக்கள் தெரிவித்தனர்.

**'கோட்டா' முறைக்கு வேண்டும் 'டாட்டா'; பசுந்தேயிலை வரத்து அதிகரிப்பால் திணறல்**

பந்தலுார் : 'பந்தலுார் அருகே எருமாடு இன்கோ தேயிலை தொழிற்சாலையில் கோட்ட முறையை கைவிட வேண்டும்' என, வலியுறுத்தப்பட்டுள்ளது.

நீலகிரி மாவட்டத்தில், 15 இன்கோ தேயிலை தொழிற்சாலைகள் செயல்பட்டு வருகின்றன. 20 ஆயிரம் விவசாயிகள் உறுப்பினர்களாக உள்ளனர்.இதில், பந்தலுார் அருகே எருமாடு இன்கோ தேயிலை தொழிற்சாலையில், 1,300க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் உள்ள நிலையில், பசுந்தேயிலை வரத்து அதிகரிப்பால், 'கோட்டா' முறை அமுல்படுத்தப்பட்டுள்ளது.இந்த தொழிற்சாலையில் இரண்டு அடுப்புகள் உள்ள நிலையில், கடந்த பல மாதங்களுக்கு முன்னர் ஒரு அடுப்பு பழுதடைந்துள்ளது. அதனை சீரமைக்க, உரிய நடவடிக்கை எடுக்காததால் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. 'இந்த தொழிற்சாலையில், நாள்தோறும், 10 ஆயிரம் கிலோ பசுந்தேயிலை அரை முடியும்' என, கூறப்படும் நிலையில், ஒரு உறுப்பினர், 200 கிலோ பசுந்தேயிலையை மட்டுமே தொழிற்சாலைக்கு வழங்க வேண்டும் என, நிர்வாகம் சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால், விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இது குறித்து தொழிற்சாலை நிர்வாக அதிகாரிகள் கூறுகையில்,'வறட்சி காலங்களில் தனியார் தேயிலை தொழிற்சாலைகளில் கூடுதல் விலை கிடைப்பதால், அங்கு பல உறுப்பினர்கள் தேயிலையை கொடுக்கின்றனர். தற்போது, மழையின் காரணமாக, தேயிலை வரத்து அதிகரித்துள்ளதால், இந்த தொழிற்சாலையை நாடுகின்றனர். இதனால்,

கடந்த நான்கு மாதங்களில், ஒரு உறுப்பினர் வழங்கியுள்ள பசுந்தேயிலையை கணக்கில் கொண்டு தற்போது பசுந்தேயிலை வாங்கப்படுகிறது. இதில் எந்த உள்நோக்கமும் கிடையாது. அடுப்பு சீரமைக்க தற்போதுதான் அனுமதி கிடைத்துள்ளதால், அதற்கான பணிகள் துவக்கப்பட்டுள்ளது.விரைவில், இப்பிரச்னைக்கு தீர்வு காணப்படும்' என்றனர்.

## தொடரும் மழை: இலையில் சிலந்தி தாக்குதல் இல்லை

கோத்தகிரி : நீலகிரி மாவட்டத்தில் தொடர்ந்து பெய்துவரும் மழையால், தேயிலை தோட்டங்களில் சிவப்பு சிலந்தி நோயின் தாக்கம் குறைந்துள்ளது.

நீலகிரி மாவட்டத்தில், நீர் ஆதாரம் உள்ள சிறிய விளை நிலங்களில் மட்டுமே, காய்கறி சாகுபடி செய்யப்படுகிறது. பெருமளவிலான பரப்பளவில், தேயிலை பயிரிடப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு பல மாதங்கள் வறட்சியான காலநிலை நிலவியதால், தேயிலை தோட்டங்களில், சிவப்பு சிலந்தி நோய் தாக்கி, மகசூல் குறைந்திருந்தது.ஆனால், நடப்பாண்டு, வழக்கத்திற்கு மாறாக, ஏப்ரல் இரண்டாவது வாரத்தில் இருந்து, தொடர்ந்து மழைப் பெய்து வருவதால், சிவப்பு சிலந்தி நோயின் தாக்கம் வெகுவாக குறைந்துள்ளது.வாட்டம் அடைந்த தேயிலை தோட்டங்களில் அரும்புகள் துளிர்விட்டு, பசுந்தேயிலை மகசூல் அதிகரித்துள்ளது.ஆனால், பசுந்தேயிலை விலை படிப்படியாக குறைந்துவருகிறது.

கடந்த ஆண்டு இதே மாதத்தில், பசுந்தேயிலை, 'கிரேடு'க்கு ஏற்ப, குறைந்தப்பட்சம் சராசரியாக, ஒரு கிலோ பசுந்தேயிலைக்கு 15 ரூபாய் வரை விலை கிடைத்துவந்தது.ஆனால், நடப்பாண்டு, அந்த விலை பாதியாக குறைந்துள்ளது. மகசூல் அதிகரித்ததன் காரணமாக, பல

தேயிலை தொழிற்சாலைகள், விவசாயிகளிடம் இருந்து முழுமையாக பசுந்தேயிலையை கொள்முதல் செய்வதை நிறுத்தி, 'கோட்டா' முறையை அறிவித்துள்ளன.இதனால், விவசாயிகள் பறித்த பசுந்தேயிலையை முழுமையாக வழங்க முடியாமல் திணறி வருகின்றனர்.

**லாலாபேட்டையில் தொடர் மழையால் வெற்றிலை செழிப்பு**

லாலாபேட்டை: லாலாபேட்டை பகுதியில் கடந்த சில நாட்களாக பெய்த மழை காரணமாக, வெற்றிலை கொடிக்கால் செழிப்படைந்துள்ளது. கரூர் மாவட்டம், கள்ளப்பள்ளி பஞ்சாயத்துக்குட்பட்ட லாலாபேட்டை சுற்று வட்டாரத்தில், 100க்கும் மேற்பட்ட ஏக்கரில் வெற்றிலை கொடிக்கால் உள்ளது. கடந்த மாதம் நடப்பட்ட வெற்றிலைக்கு போதுமான தண்ணீர் இல்லாமல் வளர்ச்சி தடைப்பட்டது. கடந்த சில நாட்களாக லாலாபேட்டை, கள்ளப்பள்ளி, பிள்ளபாளையம், புதுப்பட்டி, மகாதானபுரம், கீழ சிந்தலவாடி ஆகிய பகுதிகளில் பரவலாக மழை பெய்தது. இதன் மூலம் வெற்றிலை கொடிக்கால் பயிர்களுக்கு தேவையான மழை நீர் கிடைத்தால், வெற்றிலை செழிப்பாக வளர்ந்துள்ளது, என்று விவசாயிகள் தெரிவித்தனர்.

**கொட்டியது ! : 20 ஆண்டுக்கு பிறகு ஏப்ரல், மே மாதம் மழை : தென்மேற்கு பருவமழை கை கொடுக்குமா?**

காரைக்குடி: இருபது ஆண்டுக்கு பிறகு இந்த ஆண்டு தான், ஏப்ரல், மே ஆகிய இரண்டு மாதம் கோடை மழை பெய்துள்ளது. தென்மேற்கு பருவமழையும் இதுபோன்று கைகொடுக்க வேண்டும் என விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

கடந்த 5-ம் தேதி அக்னி வெயில் ஆரம்பித்தாலும், தொடர்ந்து பெய்து வரும் மழையால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து வருகின்றனர். சிவகங்கை மாவட்டத்தின் சராசரி மழையளவு 904 மி.மீ., ஒவ்வொரு

ஆண்டும் இந்த மழையளவு கிடைக்காதா? என விவசாயிகள் மட்டுமன்றி, வேளாண் அதிகாரிகளும் எதிர்பார்ப்பதுண்டு.

கடந்த 2014-ல் சராசரி அளவை எட்டினாலும், ஒரே நேரத்திலும், பருவம் தவறியும் மழை பெய்ததால், விவசாயிகள் முழு பயனை அனுபவிக்க முடியவில்லை. மாவட்டத்தை பொறுத்தவரை, கடந்த 55 ஆண்டுகளில், ஏப்ரலில் கோடை மழை பெய்தால், மே மாதம் வெயில் வாட்டி வதைக்கும். இந்த மழை பயன்படாமல் போகும்.

அதிகபட்சமாக கடந்த 1981ம் ஆண்டு மட்டும் மே மாதம் 183 மி.மீ., மழை பெய்துள்ளது. 1994ம் ஆண்டு ஏப்ரலில் 115 மி.மீ., மே மாதம் 130 மி.மீ., மழை பெய்துள்ளது. அதன்பிறகு 20 ஆண்டில், 2004 மே மாதம் 168 மி.மீ., 2007-ல் மே மாதம் 101 மி.மீ., 2013 மே மாதம் 175 மி.மீ., மழை பெய்துள்ளது. 20 ஆண்டில் 5 ஆண்டு மட்டுமே கோடை மழை பெய்துள்ளது. இந்த ஆண்டு கடந்த ஏப்ரலில் 80 மி.மீட்டரும், மே மாதம் நேற்று வரை 110 மி.மீ., மழையும் பெய்துள்ளது. 20 ஆண்டுக்கு பிறகு இருமாதமும் மழை பெய்துள்ளது. தென்மேற்கு பருவமழை கடந்த ஆண்டு ஆகஸ்டில் தொடங்கியது. பருவம் தொடங்கியதே தவிர மழை பொழியவில்லை. இந்த ஆண்டு கோடை மழை தந்த மகிழ்ச்சியை, ஜூன், ஜூலையில் பெய்யும் தென்மேற்கு பருவமழையும் தர வேண்டும், என்பதே விவசாயிகளின் விருப்பம். அவ்வாறு மழை பொழியுமானால், விவசாயிகள் முன்கூட்டியே சாகுபடியில் ஈடுபட வாய்ப்பு உள்ளது.

**குறைதீர் கூட்டம்**

விருதுநகர்: மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் மே 29 பகல் 11 மணிக்கு விருதுநகர் கலெக்டர் அலுவலகத்தில் கலெக்டர் ராஜாராமன் தலைமையில் நடக்கிறது. இதில் விவசாயம் தொடர்பான பொதுவான கோரிக்கைகளை கலெக்டரிடம் மனு மூலம் தெரிவித்து விவசாயிகள் பயன்பெறலாம், என, கலெக்டர் ராஜாராமன் தெரிவித்துள்ளார்

**திருச்சுழியில் 66 மி.மீ., மழை**

விருதுநகர்: மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக தொடர்ச்சியாக கோடைமழை பெய்து வருகிறது. நேற்றுகாலை 8.30 மணிப்படி மழையளவு (மி.மீ.,): அருப்புக்கோட்டை .4, ஸ்ரீவி., 8, சிவகாசி 8.8, விருதுநகர் 6.2, திருச்சுழி 66, காரியாபட்டி .4, வத்திராயிருப்பு 3.5, பிளவக்கல் 4.2, கோவிலாங்குளம் 22.8.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**மல்லிகை விலை திடீர் உயர்வு**

மதுரை,மே 19:மதுரையில் மல்லிகை விலை திடீரென கிலோ ரூ.550 வரை உயர்ந்தது.

மதுரை மல்லிகை கடந்த இரு மாதங்களாக விலை குறைவாக காணப்பட்டது. கிலோ ரூ.100 முதல் ரூ.15 வரையில் விற்பனையாகி வந்தது. இந்நிலையில் மதுரை மாட்டுத்தாவணி சந்தையில் மல்லிகை விலை திடீரென ரூ.550 வரை உயர்ந்தது.

வியாபாரிகள் போட்டி போட்டு மல்லிகைப்பூவை வாங்கினர். மல்லிகை மட்டுமல்லாமல் கனகாம்பரம், பிச்சிப் பூ உள்ளிட்ட மற்ற பூக்களின் விலைகளும் உயர்ந்திருந்தன. விலை நிலவரம்: கனகாம்பரம் ரூ.400,கலர் பிச்சிப்பூ ரூ.400,பொடி பிச்சிப்பூ ரூ.350, சம்பங்கி ரூ.130, பட்ரோஸ் ரூ.60,வெள்ளை அரளி ரூ.100,அரளி ரூ.50, பொடி பிச்சிப்பூ ரூ.350,வாடாமல்லி ரூ.60,செவ்வந்திரூ.100. மழை காரணமாக மல்லிகைப்பூ உற்பத்தி குறைவாக உள்ளது.

சந்தைக்கு சராசரியை விட மிகவும் குறைவாக பூ வரத்து இருந்தது. மேலும் புதன்கிழமை வைகாசி முகூர்த்தம் என்பதால் மல்லிகைக்கு மவுசு

அதிகரித்து விலை அதிகரித்துள்ளது. ரூ.400 முதல் ரூ.500 வரையில் விலை உயர்ந்துள்ளது. அடுத்தடுத்து முகூர்த்த தினங்கள் உள்ளதால் விலை உயர்வு அடுத்த சிலநாள்களுக்கு நீடிக்கக்கூடும் என வியாபாரிகள் தெரிவித்தனர்.

**குறுவை நெல் சாகுபடிக்கு தயாராகும் விவசாயிகள்**



கடந்த சில தினங்களாகப் பெய்து வரும் மழையைத் தொடர்ந்து காஞ்சிபுரம் மாவட்டத்தில் குறுவை நெல் சாகுபடியை விவசாயிகள் தொடங்கியுள்ளனர்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஒவ்வொரு ஆண்டும் குறுவை சாகுபடியில் (சொர்ணவாரி) சராசரியாக 45 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் நெல் பயிரிடப்படுவது வழக்கம். கடந்த சில ஆண்டுகளாகப் பருவமழை பொய்த்து, கோடை மழையும் இல்லாததால் விவசாயிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டனர். கிணற்றுப் பாசனம் உள்ள விவசாயிகள் மட்டும் குறிப்பிட்ட அளவு பயிரிட்டு வந்தனர். இதனால் கடந்த 4 ஆண்டுகளாக மாவட்டத்தில் சுமார் 20 ஆயிரம் ஏக்கர் அளவே குறுவை சாகுபடி செய்யப்பட்டு வந்தது.

இந்த நிலையில், சித்திரை பிறந்தது முதல் கோடை மழை ஓரளவு பெய்து வருகிறது. இதைப் பயன்படுத்தி மாவட்டத்தில் பரவலாக கோடை உழவுப் பணியில் ஈடுபட்டு விளை நிலங்களை தயார் நிலையில்

விவசாயிகள் வைத்திருந்தனர். இந்த நிலையில் கடந்த சில தினங்களாக பெய்து வரும் மழையைப் பயன்படுத்தி விவசாயிகள் குறுவை சாகுபடிக்கு நடவுப்பணி வரை வந்துள்ளனர். இப்போது கிணற்றுப் பாசனம் வசதியுள்ள விவசாயிகள் நடவுப் பணியைத் தொடங்கிவிட்டனர். மேலும் சில தினங்களுக்கு மழை நீடிக்கும் பட்சத்தில் பெருவாரியான விவசாயிகள் நடவுப்பணிக்கு தயாராகிவிடுவர் என்று தெரிகிறது.

இது குறித்து காஞ்சிபுரம் ஒன்றியம் பெரியாநத்தம் கிராமத்தைச் சேர்ந்த விவசாயிகள் கூறியது: சித்திரை பிறந்தது முதல் கோடை மழை பரவலாகப் பெய்து வருகிறது. இந்த ஈரப்பதத்தை பயன்படுத்தி கோடை உழவுப் பணியில் ஈடுபட்டோம். கடந்த சில தினங்களாக மிதமான மழை பெய்ததால் நிலங்களில் ஓரளவு தண்ணீர் நிற்கும் நிலை உள்ளது. இதனால் நடவுப் பணியைத் தொடங்கியுள்ளோம். கிணற்றுப் பாசனம் இருப்பதால், தைரியமாக நடவு செய்து வருகிறோம். கிணற்றுப் பாசனம் இல்லாத விவசாயிகளுக்கு சிரமம்தான். இந்த மழையை நம்ப முடியாது, இப்போது பெய்யும் மழையை நம்பி நடவு செய்து விட்டு, பால் பிடிக்கும் பருவத்தில் மழை இல்லை என்றால், விவசாயிகளுக்கு நஷ்டம்தான் மிஞ்சும். எனவே அடுத்த சில தினங்களுக்கு பெய்யும் பருவமழையை கணக்கில் கொண்டு விவசாயத்தில் ஈடுபடுவர் என்றனர்.

இது குறித்து காஞ்சிபுரம் மாவட்ட வேளாண் இணை இயக்குநர் சீத்தாராமன் கூறியது: மாவட்டத்தில் கடந்த 2005-ஆம் ஆண்டு காலக்கட்டத்தில் கூட குறுவை சாகுபடியில் 60 ஆயிரம் ஏக்கர் வரை நெல் பயிரிடப்பட்டுள்ளது. சராசரியாக 45 ஆயிரம் ஏக்கர் நிலத்தில் குறுவை சாகுபடி செய்யப்படும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. ஆனால் கடந்த 4 ஆண்டுகளாக 20 ஆயிரம் ஏக்கர் வரையில்தான் பயிரிடப்பட்டது. இந்த ஆண்டு ஓரளவுக்கு மழை பெய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தேவையான அளவு கோ-51 ரக விதை இருப்பில் வைக்கப்பட்டுள்ளது. மேலும் தேவையான உரமும் இருப்பில் உள்ளது.

மழை கைகொடுக்கும் பட்சத்தில் இந்த குறுவைப் பருவத்தில் 45 ஆயிரம் ஏக்கரில் விளைவிக்க முடியும் என்றார் அவர்.

**வேளாண் காப்பீடுத்திட்டம்: புதுகை மாவட்டத்துக்கு ரூ.118 கோடி இழப்பீடு தொகை**

புதுக்கோட்டை மாவட்டத்தில் கடந்த 2013-14 -ம் ஆண்டில் நெல் பயிருக்கு காப்பீடு செய்த விவசாயிகளுக்கு தேசிய வேளாண் காப்பீடு நிறுவனம் ரூ.118 கோடி இழப்பீடு தொகை ஒதுக்கியுள்ளது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் சென்ற (2013-14) ஆண்டில் சுமார் 74,262 எக்டேரில் நெல்பயிரை சாகுபடி செய்த விவசாயிகள் 78,320 பேர் வேளாண்காப்பீடு செய்தனர். இதன் மூலம் ரூ. 3.11 கோடி பிரிமியத் தொகை காப்பீடு நிறுவனத்துக்கு செலுத்தப்பட்டது. இந்நிலையில், அந்த ஆண்டில் பருவ மழை ஏமாற்றியதுடன் மின்சாரமும் கைகொடுக்காத காரணத்தால் காவிரி டெல்டா பகுதி உள்பட மாவட்டம் முழுவதும் சாகுபடி முடங்கிப்போனது. இதையடுத்து இழப்பைச் சந்தித்த விவசாயிகள் வேளாண் காப்பீடு நிறுவனம் மூலம் உரிய இழப்பீடு கிடைக்குமென எதிர்பார்த்துக் காத்திருந்தனர்.

இந்நிலையில் புதுக்கோட்டை மாவட்டத்துக்கு வேளாண் காப்பீடுக்கான இழப்பீடுத்தொகை ரூ. 118 கோடி ஒதுக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இது குறித்து மண்டல கூட்டுறவு இணைப்பதிவாளர் கே.வி.எஸ். குமார் கூறியதாவது:, புதுக்கோட்டை மாவட்டத்தில் 2013-14 -ல் வேளாண் காப்பீடு செய்த விவசாயிகளுக்கு ரூ.118 கோடி இழப்பீடுத்தொகை அறிவிக்கப்பட்டுள்ளது. அதில், முதல் தவணையாக ரூ. 65 கோடி வரப்பெற்றுள்ளது. இதன் மூலம், மாவட்டத்தில் உள்ள மொத்தம் 44 பிர்காக்களில் 20 பிர்காக்களைச் சார்ந்த சுமார் 30 முதல் 35 ஆயிரம்

விவசாயிகள் பயன்பெறுவர். பாதிப்புகளில் 25 சதம் தொடங்கி 90 சதவிகிதம் வரை இழப்பீடு கிடைத்துள்ளதாகவும், விரைவில் சம்பந்தப்பட்ட பகுதிகளைச் சார்ந்த விவசாயிகளுக்கு வழங்கும் நடவடிக்கைகள் தொடங்கும் என்றார்.

**நாட்டுக் கோழி வளர்ப்புப் பயிற்சி**

நாட்டுக் கோழி வளர்ப்பு குறித்து 60 பேருக்கு மூன்று நாள்கள் பயிற்சி திங்கள்கிழமை தொடங்கியது.

2014-15ஆம் ஆண்டு நாட்டுக்கோழி வளர்ப்புத் திட்டத்தின் கீழ், திருத்தணி கால்நடை உதவி இயக்குநர் அலுவலகத்தில் இந்த முகாம் நடைபெற்றுவருகிறது. முகாமுக்கு உதவி இயக்குநர் மருத்துவர் செல்லத்துரை தலைமை வகித்தார். இவர்களுக்கு ரூ.1.30 லட்சம் கடனுதவி வழங்கப்படுகிறது. இதில், 25 சதவீதம் தமிழக அரசு மானியமும், 25 சதவீதம் நபார்டு வங்கி மானியமும் என அளிக்கப்படுகிறது.

கோழி வளர்ப்பு, நோய்த் தடுப்பு முறை, கோழி விற்பனை, கோழிகளை முழுமையாகப் பராமரித்தல் உள்ளிட்டவை குறித்து கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகப் பேராசிரியர் வசந்தி பயிற்சி அளித்தார்.

கோழிப் பண்ணைகளுக்கு பயனாளிகளை புதன்கிழமை நேரில் அழைத்து சென்று பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

**தேனி மாவட்டத்தில் இருமடங்கு கோடை மழை**

தேனி மாவட்டத்தில் கடந்த 2014-ஆம் ஆண்டை விட, நடப்பாண்டில் இருமடங்கு அதிகமாக கோடை மழை பெய்துள்ளது.

மாவட்டத்தில் கடந்த 2014-ஆம் ஆண்டு மார்ச், ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் 222.7 மி.மீ., மழை பெய்தது. இந்த ஆண்டு கோடை மழை

தாமதமாக தொடங்கி, கடந்த மே 4-ஆம் தேதி முதல் தொடர்ந்து பெய்து வருகிறது. கடந்த மார்ச், ஏப்ரல் ஆகிய மாதங்களிலும், மே 18-ஆம் தேதி வரையும் 416.8 மி.மீ.,மழை பெய்துள்ளது.

மாவட்டத்தின் சராசரி மழையளவான 829.8 மி.மீ., மழை எதிர்பார்க்கப்பட்ட நிலையில், தற்போது வரை 416.8 மி.மீ.,மழை பெய்துள்ளதாக, விவசாயத் துறை அதிகாரிகள் கூறினர்.

செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணி வரை பதிவான மழையளவு விவரம் வருமாறு(மி.மீ.ல்) வீரபாண்டி- 76, அரண்மனைப்புதூர்- 17.3, ஆண்டிபட்டி-1.2, வைகை அணை- 2.7, போடி-6.4, சோத்துப்பாறை-16, மஞ்சளாறு-2, பெரியகுளம்- 5, உத்தமபாளையம்-46, கூடலூர்- 20 மி.மீ.,மழை பதிவாகியுள்ளது. பெரியாறு அணை நீர்பிடிப்புப் பகுதியில் 4 மி.மீ, தேக்கடியில் 4.2 மி.மீ.,மழை பதிவாகியிருந்தது.

அணைகளின் நீர்மட்டம்: செவ்வாய்க்கிழமை காலையில் வைகை அணையின் நீர்மட்டம் 44.29 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 946 கன அடி நீர்வரத்தும், அணையில் இருந்து விநாடிக்கு 60 கன அடி தண்ணீர் வெளியேற்றமும் உள்ளது.

மஞ்சளாறு அணை நீர்மட்டம் -50.30 அடி. அணைக்கு விநாடிக்கு 269 கன அடி தண்ணீர் வரத்து உள்ளது. அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை. சோத்துப்பாறை அணைக்கு விநாடிக்கு 150 கன அடி தண்ணீர் வரத்து உள்ளது. அணை நீர்மட்டம் 126.28 அடி நிரம்பியுள்ளது. அணையில் இருந்து விநாடிக்கு 150 கன அடி வீதம் தண்ணீர் வெளியேறுகிறது.

பெரியாறு அணை நீர்மட்டம் 116.80 அடி. அணைக்கு விநாடிக்கு 358 கன அடி தண்ணீர் வரத்து உள்ளது. அணையில் இருந்து தமிழகப் பகுதி குடிநீருக்கு விநாடிக்கு 150 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.

**பவானிசாகர் அணையின் நீர்மட்டம் 59.39 அடி**

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் செவ்வாய்க்கிழமை நிலவரபடி 59.39 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 2,825 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 100 கன அடி நீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர்இருப்பு 7 டிஎம்சி.

**பருவநிலை மாற்றத்துக்கேற்ப சாகுபடியை அதிகரிக்கும் திட்டம்: காலிங்கராயன் பாசன விவசாயிகளுக்கு பயிற்சி**

பருவநிலை மாற்றத்துக்கேற்ப சாகுபடியை அதிகரிக்கும் திட்டம் தொடர்பாக காலிங்கராயன் பாசன பகுதி விவசாயிகளுக்கு ஈரோட்டில் செவ்வாய்க்கிழமை பயிற்சி அளிக்கப்பட்டது.

பருவநிலை மாற்றத்திற்கேற்ப சாகுபடியை அதிகரிக்கும் வகையில் 2012-ம் ஆண்டு முதல் புதிய திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத் திட்டத்துக்காக நார்வே நாடு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. ஒவ்வொரு ஆண்டும் பருவநிலை மாற்றத்திற்கேற்ப சாகுபடியை அதிகரிக்கும் குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

தமிழகத்தில் ஈரோடு மாவட்டத்தில் காலிங்கராயன் பாசன பகுதியும், திருச்சி மாவட்டத்தில் பொன்னியாறு பாசன பகுதியும் தேர்வு செய்யப்பட்டுள்ளன. ஈரோடு வேளாண் துறை, பொதுப்பணித்துறை, கோவை வேளாண் பல்கலை. ஆகியவை இணைந்து இதற்கான பயிற்சி முகாமை ஈரோடு கிளப்மேலாஞ்ச் ஹோட்டலில் செவ்வாய்க்கிழமை நடத்தின.

இந்நிகழ்ச்சிக்கு கீழ்பவானி வடிநில கோட்ட செயற்பொறியாளர் ராஜு தலைமை வகித்தார். இதில் சிறப்புஅழைப்பாளராக கோவை வேளாண் பல்கலை கழக பேராசிரியர் முனைவர் கீதாலட்சுமி கலந்துகொண்டு

பேசினார். பின்னர் முனைவர் கீதாலட்சுமி இது குறித்து கூறுகையில், உலக வெப்பமயமாதலில் பருவநிலை மாற்றத்துக்க சாகுபடி முறைகள் மேற்கொள்ள குறித்து நார்வே நாட்டின் நிதியுதவியுடன் இந்த திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

4 ஆண்டுகளில் 2 ஆயிரத்து 100 ஏக்கர் பரப்பளவில் இந்த திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. இதுவரை காலிங்கராயன் பாசன பகுதியில் 600 ஏக்கரும், பொன்னியாறு பாசன பகுதியில் 200 ஏக்கர் பரப்பளவிலும் இந்த திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

இந்த பகுதிகளில் திருந்திய நெல் சாகுபடி திட்டத்தின்கீழ் 22 முதல் 25 சதவீதம் வரை நெல் உற்பத்தி அதிகரித்துள்ளது. இடுபொருள்கள், விதைகள் கொடுக்கப்பட்டு வருகிறது. இதே போல ஈரோடு கருங்கல்பாளயம் குயிலான்தோப்பு பகுதியில் ஒரு தோட்டத்திலும், கொம்பனைபுதூரில் ஓர் இடத்திலும் என 2 இடங்களில் கிராம அறிவு மையம் திறக்கப்பட்டுள்ளது.

விவசாயிகள் தங்களது சந்தேகங்களை இந்த மையத்தில் தெரிவித்து நிவர்த்தி செய்து கொள்ளலாம். கோவை வேளாண் பல்கலை.யுடன் இணைந்து இம் மையம் செயல்பட்டு வருகிறது. விவசாயிகளுக்கு ஒவ்வொரு பயிருக்கும் ஆலோசனகள் வழங்கப்பட்டு வருகின்றன. எஸ்எம்எஸ் மூலமாகவும் தகவல்கள் அளிக்கப்பட்டு வருகிறது என்றார்.

இந்நிகழ்ச்சியில் வேளாண் இணை இயக்குநர் செல்வராஜ், வேளாண் பல்கலை. பேராசிரியர் லட்சுமணன், திருச்சி வேளாண் பயிற்சி நிறுவனத்தை சேர்ந்த முன்னர் நாகேஸ், பொன்னியாறு பொறியாளர் மீனாட்சி சுந்தர அரசு, காலிங்கராயன் பாசன உதவி பொறியாளர் கார்த்திகேயன் மற்றும் விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர்.

**சின்ன வெங்காயம் விலை உயர்வு: விவசாயிகள் மகிழ்ச்சி**

கடந்த 2 வாரங்களாக சின்னவெங்காய கொள்முதல் விலை உயர்ந்துள்ளதால், வெங்காயம் பயிரிட்டுள்ள காங்கயம் விவசாயிகள் நிம்மதியடைந்துள்ளனர்.

÷காங்கயம், குண்டடம், தாராபுரம் பகுதியில் பல ஆயிரக்கணக்கான ஏக்கர் பரப்பளவில் சின்னவெங்காயம் சாகுபடி செய்யப்பட்டு, தற்போது அறுவடை நடைபெற்று வருகிறது. இந்தப் பகுதிகளில் அறுவடை செய்யப்படும் வெங்காயம் உள்ளூர் வியாபாரிகள் மூலம் கொள்முதல் செய்யப்பட்டு திண்டுக்கல், மதுரை, சென்னை, பொள்ளாச்சி, கோவை உள்ளிட்ட பகுதிகளுக்கு விற்பனைக்காக அனுப்பப்படுகிறது.

÷இப் பகுதியில் பெய்து வரும் தொடர்மழை காரணமான அறுவடை பணிகள் பாதிக்கப்பட்டாலும், கடந்த 2 நாள்களாக மழை ஓய்ந்துள்ளதால் அறுவடைப்பணிகள் விறுவிறுப்புடன் நடைபெற்று வருகின்றன.

÷கடந்த 20 நாள்களுக்கு முன்பு வரை சின்னவெங்காயம் கிலோ ரூ.12 வரையே கொள்முதல் செய்யப்பட்டது. இதனால் சின்னவெங்காய விவசாயிகள் லாபம் கிடைக்காமல் பாதிக்கப்பட்டனர். இந்நிலையில் கடந்த 2 வாரங்களுக்கு முன்பிருந்து வெங்காய விலை உயரத் துவங்கியது. படிப்படியாக விலை உயர்ந்து தற்போது கிலோ ரூ.25 முதல் 30 வரை கொள்முதல் செய்யப்படுகிறது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

÷இதுகுறித்து விவசாயிகள் கூறியது: பொதுவாகவே ஏனைய பயிர்களைக் காட்டிலும் வெங்காயம் பணப்பயிராகக் கருதப்படுகிறது. ஏக்கருக்கு 8 டன் மகசூல் கிடைத்து, விலை கிலோ ரூ.15-க்கு விற்றாலும் ஓரளவு லாபம் கிடைக்கும். இடுபொருள் செலவே ஏக்கருக்கு ரூ.50 ஆயிரம் வரை செலவாகும். தற்போது ஏக்கர் ஒன்றுக்கு 6 டன் வரையே

மகசூல் கிடைத்துள்ளது. இருந்தபோதிலும், விலை அதிகரித்துள்ளதால் லாபம் கிடைத்து வருகிறது என்றனர்.

**வேளாண் காப்பீட்டுத் திட்டம்: புதுகை மாவட்டத்துக்கு ரூ.118 கோடி இழப்பீடு**

புதுக்கோட்டை மாவட்டத்தில் கடந்த 2013-14-ல் நெல் பயிருக்கு காப்பீடு செய்த விவசாயிகளுக்கு தேசிய வேளாண் காப்பீடு நிறுவனம் ரூ.118 கோடி இழப்பீடு தொகை ஒதுக்கியுள்ளது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் சென்ற (2013-14) ஆண்டில் சுமார் 74,262 எக்டேரில் நெல்பயிரை சாகுபடி செய்த விவசாயிகள் 78,320 பேர் வேளாண்காப்பீடு செய்தனர். இதன் மூலம் ரூ. 3.11 கோடி பிரிமியத் தொகை காப்பீடு நிறுவனத்துக்கு செலுத்தப்பட்டது.

இந்நிலையில், அந்தாண்டில் பருவ மழை ஏமாற்றியதுடன் மின்சாரமும் கைகொடுக்காததால் காவிரி டெல்டா பகுதி உள்பட மாவட்டம் முழுவதும் சாகுபடி முடங்கிப்போனது. இதையடுத்து இழப்பைச் சந்தித்த விவசாயிகள் வேளாண் காப்பீடு நிறுவனம் மூலம் உரிய இழப்பீடு கிடைக்குமென எதிர்பார்த்துக் காத்திருந்தனர். இந்நிலையில் புதுக்கோட்டை மாவட்டத்துக்கு வேளாண் காப்பீடுக்கான இழப்பீடுத்தொகை ரூ. 118 கோடி ஒதுக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இதுகுறித்து மண்டல கூட்டுறவு இணைப்பதிவாளர் கே.வி.எஸ். குமார் கூறியது: புதுக்கோட்டை மாவட்டத்தில் 2013-14 -ல் வேளாண் காப்பீடு செய்த விவசாயிகளுக்கு ரூ.118 கோடி இழப்பீடு அறிவிக்கப்பட்டுள்ளது.

அதில், முதல் தவணையாக ரூ. 65 கோடி வரப்பெற்றுள்ளது. இதன் மூலம், மாவட்டத்தில் உள்ள மொத்தம் 44 பிர்காக்களில் 20

பிர்காக்களைச் சார்ந்த சுமார் 30 முதல் 35 ஆயிரம் விவசாயிகள் பயன்பெறுவர்.

பாதிப்புகளில் 25 சதம் தொடங்கி 90 சதம் வரை இழப்பீடு கிடைத்துள்ளதாகவும், விரைவில் சம்பந்தப்பட்ட பகுதிகளைச் சார்ந்த விவசாயிகளுக்கு அப்தை வழங்கும் நடவடிக்கை தொடங்கும் என்றார்.

**வளர்ச்சிப் பணிகள்: கண்காணிப்பு அலுவலர் ஆய்வு**

புதுக்கோட்டை ஆவின் நிலையத்தில் ரூ. 32 லட்சத்தில் அமைக்கப்பட்டுள்ள மர எரிபொருள் கொதிகலனை வேளாண்துறை அரசு சிறப்புச் செயலரும், கண்காணிப்பு அலுவலருமான வெ. சந்திரசேகரன் திங்கள்கிழமை ஆய்வுசெய்தார்

புதுக்கோட்டை மாவட்டத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்தில் பங்கேற்க வந்த அவர் மாவட்டத்தில் பல்வேறு திட்டப்பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

முன்னதாக, திங்கள்கிழமை பிற்பகல் குன்றாண்டார்கோவில் ஊராட்சி ஒன்றியம், பள்ளத்துப்பட்டியில் வேலை உறுதித் திட்டத்தின் கீழ் ரூ.10 லட்சத்தில் கட்டப்பட்ட கிராம சேவை மையம், பசுமலைப்பட்டியில் ஒருங்கிணைந்த நீர்வடி பகுதி மேலாண்மைத் திட்டத்தின் கீழ் ரூ.35 ஆயிரத்தில் நாட்டுகோழி வளர்ப்புப் பண்ணை, அன்னவாசல் ஊராட்சி ஒன்றியம் அம்மாசத்திரத்தில் தீவன அபிவிருத்தி திட்டத்தின் கீழ் ரூ.8 ஆயிரத்தில் வளர்க்கப்படும் தீவன புல்வளர்ப்பு பணி, மானிய விலையில் ரூ.25 ஆயிரத்தில் வழங்கப்பட்ட விசைநீர் தெளிப்பான், தொடையூரில் ஒருங்கிணைந்த நீர்வடிப் பகுதி மேம்பாட்டு முகமை சார்பில் ரூ.1 லட்சத்தில் அமைக்கப்பட்ட பண்ணைக்குட்டை பணி, சத்தியமங்கலத்தில் தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ.35 ஆயிரத்தில் மேற்கொள்ளப்பட்ட நீடித்த நவீன கரும்பு சாகுபடி பணி, புதுக்கோட்டை

ஆவின் பால்பண்ணையில் ரூ.32 லட்சத்தில் மேற்கொள்ளப்பட்ட மர எரிபொருள் கொதிகலன், புதுக்கோட்டை பழைய பேருந்து நிலையம் அருகே ரூ.40 லட்சத்தில் கட்டப்பட்ட அம்மா உணவகம் உள்ளிட்ட பல்வேறு வளர்ச்சிப் பணிகளை ஆய்வு செய்தார்.

இதைத் தொடர்ந்து மாவட்ட ஆட்சியரகக் கூட்டரங்கில் ஆட்சியர் சு. கணேஷ் முன்னிலையில் நடைபெற்ற அனைத்துத் துறை அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டத்துக்குத் தலைமை வகித்த வெ. சந்திரசேகரன் பேசியது:

தமிழக அரசு நிதிஒதுக்கி ஒவ்வொரு துறைகளின் கீழ் நடைபெற்று முடிந்த, நடைபெறும் பணிகளின் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்யும் நோக்கில் இக்கூட்டம் நடைபெறுகிறது என்றார்.

அனைத்துத் துறை அலுவலர்களும் நடைபெறும் பணிகளை அதன் நிர்ணயிக்கப்பட்ட கால அளவிற்குள் முடிக்க சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

மாவட்ட வருவாய் அலுவலர் சு. மாரிமுத்து, திட்ட இயக்குநர் (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை) எம். சந்தோஷ்குமார், இணை இயக்குநர் (கால்நடை பராமரிப்புத் துறை) மோகனரங்கன், நகராட்சி ஆணையர் (பொ) ஜெ.சுப்பிரமணியன், ஆவின் பொது மேலாளர் மனோகரன், நகர்மன்றத் தலைவர் ரா. ராஜசேகரன், அனைத்துத் துறை அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**மே மாத விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடைபெறாது: ஆட்சியர்**

தூத்துக்குடி மாவட்ட விவசாயிகளுக்கு மாதம்தோறும் நடத்தப்படும் குறைதீர் கூட்டம் மே மாதம் நடைபெறாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து, மாவட்ட ஆட்சியர் ம. ரவிக்குமார் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

தூத்துக்குடி மாவட்டத்தில் அனைத்து வட்டங்களிலும் வருவாய் தீர்வாய கணக்கு முடிப்பு நிகழ்ச்சி (ஜமாபந்தி) நடைபெற்று வருகிறது. இந்த ஜமாபந்தியில் விவசாயிகள் உள்ளிட்ட அனைவரும் கலந்துகொண்டு மனுக்கள் வழங்கி வருகின்றனர்.

மாவட்ட ஆட்சியர் உள்ளிட்ட அனைத்து அலுவலர்களும் ஜமாபந்தியில் கலந்துகொள்வதால் மே மாதத்தில் நடைபெற வேண்டிய விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் நடைபெறாது. அடுத்த விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் ஜூன் மாதம் நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**பனைமரத் தொழிலாளர் நலவாரியத்தில் சேர வேம்பாரில் 23இல் சிறப்பு முகாம்**

பனைமரத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் புதிய உறுப்பினராகச் சேர விரும்புவோருக்கு வேம்பாரில் 23ஆம் தேதி சிறப்பு முகாம் நடத்தப்படுகிறது.

இதுகுறித்து, மாவட்ட ஆட்சியர் ம. ரவிகுமார் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

தமிழ்நாடு பனைமரத் தொழிலாளர் நலவாரியத்தில் புதிய உறுப்பினர்களை சேர்ப்பதற்கான சிறப்பு பதிவு முகாம் தூத்துக்குடி தொழிலாளர் அலுவலர் மூலம் மே 23ஆம் தேதி விளாத்திகுளம் அருகேயுள்ள வேம்பார் கிராமத்தில் உள்ள தேவநேசம் இருதயம்மாள் பாலிடெக்னிக்கில் நடைபெற உள்ளது.

எனவே, இந்த சிறப்பு பதிவு முகாமில் விளாத்திகுளம் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த பனைமரத் தொழிலாளர்கள் குடும்ப அட்டை நகல், வயதுச் சான்று, ஆதார் அட்டை நகல் மற்றும் இரண்டு புகைப்படம் ஆகியவற்றுடன் நேரில் சென்று தங்களை உறுப்பினராகப் பதிவு செய்து, அரசு வழங்கும் நலத்திட்ட உதவிகளைப் பெற்று பயன் பெறலாம்.

இதேபோல, திருச்செந்தூரில் பனைமரத் தொழிலாளர்களுக்கான சிறப்பு பதிவு முகாம் ஜூன் 13ஆம் தேதி நடைபெற உள்ளது. எனவே, திருச்செந்தூர் மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த பனைமரத் தொழிலாளர்கள் இந்த முகாமில் கலந்துகொண்டு தங்களை உறுப்பினர்களாகப் பதிவு செய்து அரசு வழங்கும் நலத்திட்ட உதவிகளைப் பெற்று பயன்பெறலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**கால்நடைகளுக்கு மலட்டுத்தன்மை நீக்கும் சிகிச்சை முகாம்: இன்று தொடக்கம்**

புதுச்சேரி கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் கால்நடைகளுக்கான மலட்டுத்தன்மை நீக்கும் 1 மாத கால சிகிச்சை முகாம் புதன்கிழமை தொடங்குகிறது.

கால்நடை பராமரிப்பு இயக்குநர் பத்மநாபன் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

பால் உற்பத்தியை பெருக்கும் நோக்கிலும், பசுங்கன்றுகளின் எண்ணிக்கையை அதிகரிக்கும் நோக்கிலும், விவசாயிகளுக்கு லாபம் கிடைக்கும் வகையிலும், கருத்தரிக்க இயலாத நிலையில் உள்ள கறவை மாடுகள் மற்றும் கிடாரிகளுக்கு உரிய சிகிச்சைகளை போர்க்கால அடிப்படையில் அளித்திட, கால்நடை பராமரிப்பு மற்றும் கால்நடை நலத் துறை மலட்டுத்தன்மை நீக்கும் சிகிச்சை முகாம் புதன்கிழமை தொடங்கி 1 மாத காலம் புதுவை பகுதியில் நடக்கிறது.

கால்நடை விவசாயிகள், இந்த அரிய வாய்ப்பை பயன்படுத்தி கொள்ள வேண்டும்.

இம்முகாம்கள் காரைக்கால், மாஹே, ஏனாம் பகுதிகளிலும் விரைவில் நடத்தப்படும்.

சந்தை புதுக்குப்பத்தில் மே 20ஆம் தேதியும், திருக்கனூர், சோம்பட்டில் 21-லிலும், காட்டேரிக்குப்பத்தில் 22, கீழ்சாத்தமங்கலம், சிவராந்தகத்தில் 25, அரியூர், திருவண்டார்கோவிலில் 26, சோரப்பட்டு, புராணசிங்கு

பாளையத்தில் 27, மதகடிப்பட்டில் 28, கன்னியகோயில், கிருமாம்பாக்கத்தில் 29ஆம் தேதியும் நடக்கின்றன.

மேலும் பண்டசோழநல்லூர், கரையாம்புத்தூரில் ஜூன் 1-ம் தேதியும், குருவிநத்தம், சேலியமேட்டில் 2-லிலும், பாகூரில் 3, கூடப்பாக்கம், முத்துப்பிள்ளைபாளையத்தில் 4, சேதராப்பட்டு, தொண்டமாநத்தத்தில் 5, வில்லியனூரில் 8, புதுச்சேரி, முருங்கப்பாக்கத்தில் 9, வாழைக்குளம், கருவடிக்குப்பத்தில் 10, கொம்பாக்கம், தேங்காய்த்திட்டில் 11, தவளக்குப்பம், திம்மநாயக்கன்பாளையத்தில் 12, அரியாங்குப்பத்தில் 15, புதுக்குப்பம், ஏம்பலத்தில் 16, உருவையாறு, கரிக்கலாம்பாக்கத்தில் 17, மடுகரை, கரியமாணிக்கத்தில் 18, காலாப்பட்டு, ஆலங்குப்பத்தில் 19, ரெட்டியார்பாளையம், மேட்டுப்பாளையத்தில் ஜூன் 22ஆம் தேதியும் நடக்கிறது என அந்த செய்திக் குறிப்பில் பத்மநாபன் தெரிவித்துள்ளார்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

**கடல் மீன்கள் வரத்து குறைந்ததால் புவனகிரியில் வளர்ப்பு மீன்களின் விலை உயர்வு**



புவனகிரியில் கடல் மீன்களின் வரத்து குறைந்ததால் வளர்ப்பு மீன்களின் விலையானது கடுமையாக உயர்ந்துள்ளது.

மீன்பிடி தடைகாலம்

கடலூர் மாவட்டத்தில் மீன்பிடி தடைகாலம் அமலில் இருந்து வருகின்றது. இதன் காரணமாக கடலூர் முதுநகர், புவனகிரி, பரங்கிப்பேட்டை உள்ளிட்ட கடலோர பகுதியைசேர்ந்த மீனவர்கள் கடந்த 40 நாட்களாக கடலுக்கு மீன் பிடிக்க செல்ல வில்லை. எனினும் சில மீனவர்கள் மட்டும் சிறிய படகுகளில் கடலுக்கு சென்று மீன்பிடித்து வருகின்றனர். இதனிடையே மீன்பிடி தடை காலமான 60 நாட்கள் முடிந்தபிறகு மீண்டும் கடலுக்கு சென்று மீன்களை பிடிப்பதற்கு ஏதுவாக மீனவர்கள் தங்களது படகுகள், வலைகள் ஆகியவற்றினை சீரமைக்கும் பணியில் தற்போது தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். இதனால் கடலூர் பகுதியில் உள்ள மீன் மார்க்கெட்டுகளுக்கு கடல் மீன்கள் வரத்து பெருமளவு குறைந்து விட்டது. இதன் காரணமாக மீன்மார்க்கெட்டுகளில்

தற்போது விற்கப்படும் வளர்ப்பு மீன்களுக்கு கடும் கிராக்கி ஏற்பட்டுள்ளது. இதனால் அவற்றின் விலையானது கிடுகிடு உயர்ந்து வருகின்றது. அதன் படி புவனகிரி மீன்மார்க்கெட்டில் மீன்பிடி தடைகாலத்திற்கு முன்பாக ரூ.300–க்கு விற்கப்பட்ட ஒரு கிலோ விரால் தற்போது ரூ.350–க்கு விற்கப்பட்டு வருகின்றது. அதே போல் ரூ.110–க்கு விற்கப்பட்ட 1 கிலோ கட்லா ரூ.130–க்கும், தலா ரூ.100–க்கு விற்கப்பட்ட ரோகு, போட்லாக், கோழிகெண்டை ஆகிய மீன்கள் ரூ.120–க்கும் விற்கப்பட்டு வருகின்றன. விலை கடுமையாக உயர்ந்தாலும் மீன் பிரியர்கள் வேறு வழியின்றி அவைகளை அதிக அளவில் வாங்கி சென்று வருகின்றனர்.

தினகரன்

# கால்நடை படிப்புகளுக்கு ஜூலை 10ல் கவுன்சலிங் : பல்கலைக்கழக துணைவேந்தர் பேட்டி




சென்னை : தமிழ்நாடு கால்நடை மருத்துவப் பல்கலைக்கழக துணைவேந்தர் திலகர் நிருபர்களுக்கு நேற்று அளித்த பேட்டி: தமிழ்நாடு கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகத்தின் கீழ் சென்னை, நாமக்கல், நெல்லை, ஒரத்தநாடு, ஓசூர் ஆகிய இடங்களில் மொத்தம் 5 கல்லூரிகள் உள்ளன. இங்கு கால்நடை மருத்துவம் மற்றும் கால்நடை பராமரிப்பு படிப்பின் கீழ் 280 இடங்கள், உணவுத் தொழில்நுட்ப படிப்பின் கீழ் 20, கோழி இனஉற்பத்தி தொழில்நுட்ப படிப்பின் கீழ் 20, பால்வளத் தொழில்நுட்ப பட்டப்படிப்பின் கீழ் 20 என மொத்தம் 340 இடங்கள் உள்ளன. இந்த இடங்களுக்கான மாணவர் சேர்க்கை விண்ணப்ப விநியோகம் கடந்த 17ம் தேதி தொடங்கியது. இந்தாண்டு முதல் ஆன்லைனில் மட்டும் விண்ணப்பிக்கும் முறை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இதுவரை 3,322 பேர் ஆன்லைனில்

விண்ணப்பித்துள்ளனர்.

ஆன்லைனில் விண்ணப்பித்துவிட்டு, அதை பதிவிறக்கம் செய்து மாணவர் சேர்க்கை தலைவர், தமிழ்நாடு கால்நடை மருத்துவ பல்கலைக்கழகம், மாதவரம் பால்பண்ணை, சென்னை-51 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும். விண்ணப்ப கட்டணத்தை ஆன்லைனில் செலுத்திவிடலாம். அடுத்த மாதம் 4ம் தேதி வரை மேற்கண்ட படிப்புகளுக்கு ஆன்லைனில் விண்ணப்பிக்கலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை ஜூன் 10ம் தேதிக்குள் அனுப்பி வைக்க வேண்டும். இந்தாண்டு முதல் கால்நடைபடிப்பில் கூடுதலாக 40 இடங்களை அதிகரிக்க வேண்டும் என்று அரசிடம் கோரிக்கை வைத்துள்ளோம். ஜூலை மாதம் 10ம் தேதி ரேங்க் பட்டியல் வெளியிடப்பட்டு, ஆகஸ்ட் மாதம் 20ம் தேதி கவுன்சலிங் நடத்தப்படும். தொடர்ந்து மூன்று நாட்கள் கவுன்சலிங் நடைபெறும். இவ்வாறு அவர் கூறினார். பேட்டியின்போது பல்கலைக்கழக பதிவாளர் ஹரிகிருஷ்ணன், மாணவர் சேர்க்கை தலைவர் திருநாவுக்கரசு ஆகியோர் உடனிருந்தனர்.

**புதுக்கோட்டை பலாப்பழம் உளுந்தூர்பேட்டையில் விற்பனை**

உளுந்தூர்பேட்டை, : உளுந்தூர்பேட்டை சென்னைதிருச்சி தேசிய நெடுஞ்சாலையின் மையப்பகுதியாக உள்ளது. இதனால் உளுந்தூர்பேட்டை பகுதியில் பழங்கள், துணி மற்றும் வீட்டு உபயோகப்பொருட்கள் அதிக அளவு விற்பனைக்கு வருவது வழக்கம். சீசனுக்கு ஏற்றார் போல் விற்பனை நடைபெற்று வரும் நிலையில் தற்போது பலாப்பழம் சீசன் என்பதால் உளுந்தூர்பேட்டை டோல்கேட் பகுதியில் பலாப்பழம் விற்பனை அதிக அளவு நடைபெற்று வருகிறது. டோல்கேட்டின் இரண்டு புறங்களிலும் இந்த பலாப்பழம் விற்பனை காலை முதல் இரவு வரையில் நடைபெற்று வருகிறது. இதனை கார், வேன் மற்றும் சுற்றுலாப்பேருந்துகளில் சென்னையை நோக்கி செல்பவர்களும், திருச்சி, மதுரை உள்ளிட்ட தென் மாவட்டங்களை

நோக்கி செல்பவர்களும் அதிக அளவு வாங்கி செல்கின்றனர். இதுகுறித்து பலாப்பழம் விற்பனை செய்துவரும் வியாபாரிகளிடம் கேட்டபோது, தானே புயல் தாக்கத்தினால் பண்ருட்டி பலாப்பழம் கிடைப்பதில் இந்த ஆண்டும் குறைவாகவே உள்ளது. இதனால் புதுக்கோட்டை பகுதியில் இருந்து பலாப்பழம் லாரிகளில் வாங்கி வந்து விற்பனை செய்து வருகிறோம் என கூறினார்கள். மேலும் ஒரு பலாப்பழம் விலை ரூ 150 முதல் துவங்கி ரூ 200, ரூ 250ல் இருந்து ரூ 500 வரையில் எடைக்கு தகுந்தார்போல் விற்பனை செய்யப்படுகிறது. பேருந்துகளில் செல்பவர்களுக்கு வசதியாக பாக்கெட் போட்டு ரூ10 மற்றும் ரூ 20க்கு விற்பனை செய்து வருகிறோம், தற்போது பலாப்பழம் சீசன் என்பதால் இதனை அதிக அளவு வாங்கி செல்கின்றனர். இந்த ஆண்டு மாம்பழம் மகசூல் குறைவாகவே உள்ளது. இதனால் பயணிகள் மற்றும் பொதுமக்கள் அதிக அளவு பலாப்பழத்தினை வாங்கி செல்கின்றனர் என கூறினார். பலாப்பழம் விற்பனை தீவிரமாக நடைபெற்று வருவதால் உளுந்தூர்பேட்டை டோல்கேட் பகுதியில் எப்போதும் போக்குவரத்து நொ◌ிசல் ஏற்படுகிறது.

## பயிர் சாகுபடி கணக்கெடுப்பு ஆலோசனை

திருக்கோவிலூர், : திருக்கோவிலூர் மற்றும் உளுந்தூர்பேட்டை தாலுகாவில் பயி◌ா◌் சாகுபடி பரப்பு கணக்கெடுப்பு பணி ஆலோசனை கூட்டம் திருக்கோவிலூர் கோட்டாட்சியர் பாரதிதேவி தலைமையில் நேற்று நடைபெற்றது. தாசில்தார்கள் சேகர், ராஜசேகர் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் கோடைகால மழை மற்றும் பருவ மழையையொட்டி விவசாய சாகுபடி செய்யும் பரப்பினை வருவாய் அலுவலர்களும், வேளாண்மை அலுவலர்களும் முறையாக கணக்கெடுப்பு செய்து அறிக்கை தயார் செய்ய வேண்டும். அதேநேரத்தில் வருவாய் ஆய்வாளர்கள் தரும் அறிக்கையும், புள்ளியியல்துறை வேளாண்மை அலுவலர்கள் தரும் அறிக்கையும் ஒத்துப்போகவேண்டும்.

அவ்வாறு ஒத்துப்போகும் பட்சத்தில்தான் சாகுபடியில் ஏதேனும் பாதிப்பு இருந்தால் நிவாரணம் வழங்க முடியும். சாகுபடி நிலத்தில் என்ன சாகுபடி செய்துள்ளார்களோ அதன்படி அப்படியே அடங்கலில் கணக்கு பதிவு செய்ய வேண்டும். வேளாண்மை துறையிலும், புள்ளியில் துறை, அதேபோன்று சாகுபடி மற்றும் அடங்கல் கணக்கு பராமரிக்க வேண்டும் என கோட்டாட்சியர் ஆலோசனை வழங்கினார். இதில் துணை வட்டாட்ச்சியர்கள் செல்வராஜ், தண்டபாணி ஆகியோர் கலந்து கொண்டனர்.

**கோடை மழையால் விவசாய பணியை நாடி செல்லும் 100 நாள் வேலை** திட்ட பயனாளிகள்

பொள்ளாச்சி, : கோடை மழையால், 100 நாள் வேலை திட்ட பயனாளிகள் விவசாய பணியை நாடி செல்கின்றனர். பொள்ளாச்சி தாலுகாவில் வடக்கு, தெற்கு, ஆனைமலை, கிணத்துக்கடவு ஆகிய 4 ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள கிராமங்களில் ஊரக வேலை உறுதித்திட்ட பணி நடைபெற்று வருகிறது. ஒன்றியத்திற்குட்பட்ட ஊராட்சிகளில் கடந்த 2009ம் ஆண்டில் 200க்கும் மேற்பட்ட பயனாளிகள் வேலைபார்த்து வந்தனர். வருடத்தில் 100 நாட்கள் வேலை என்று நிர்ணயிக்கப்பட்டு பணிகள் நடைபெற்றது. இதில், முதற்கட்டமாக ரூ.80 கூலியாக இருந்தது. படிப்படியாக அதிகரித்து தற்போது ரூ.183ஆக உள்ளது. இருப்பினும் பயனாளிகள் வேலைக்கு தகுந்தாற்போல் கூலி நிர்ணயம் செய்யப்படுகிறது. நடப்பாண்டில், ஊராக வேலை உறுதித்திட்ட பணியில் ஈடுபட விருப்பம் உள்ள பயனாளிகளுக்கு அதிகாரிகள் அழைப்பு விடுத்தனர். இதைதொடர்ந்து கடந்த ஏப்ரல் மாதம் ஊராட்சிகளில் பயனாளிகள் எண்ணிக்கை அதிகளவில் காணப்பட்டன. தெற்கு, ஆனைமலை, கிணத்துக்கடவு, வடக்கு ஒன்றியங்களில் 70 முதல் 80 சதவீத பயனாளிகள் ஊரக பணியில் ஈடுபட்டனர். அதிகபடியாக

ஆனைமலை ஊராட்சியில் 80 சதவீத பயனாளிகள் தொடர்ந்து வந்தனர். இந்நிலையில் தற்போது சுற்றுவட்டார கிராமங்களில் கடந்த சிலவாரங்களாக தொடர்ந்து கோடை மழைப்பொழிவு இருந்ததால், ஊராட்சியில் உள்ள வேலையுறுதித்திட்ட பயனாளிகள் பலர் விவசாய வேலையை நாடி செல்ல துவங்கியுள்ளனர். இதில் விவசாய நிலங்கள் அதிகம் உள்ள வடக்கு ஒன்றிய பகுதிகளில், விவசாயிகள் தங்கள் விளை நிலங்களில் மானாவாரி பயிர் விதைப்பில் தீவிரம் காட்டியுள்ளனர். இதை தொடர்ந்து ஊரக வேலை உறுதி திட்டத்தில் பணிபுரியும் பயனாளிகள் பலர், அதிக கூலியை எதிர்நோக்கி விவசாய தொழிலுக்கு சென்றுள்ளனர். இதனால், வடக்கு ஒன்றியத்திற்குபட்ட ஊராட்சிகளில் கடந்த சில வாரங்களாக ஊரக வேலையுறுதித்திட்ட பயனாளிகள் எண்ணிக்கை நாளுக்கு, நாள் குறைய துவங்கியது. கடந்த ஏப்ரல் மாதம் 70 சதவீத பயனாளிகள் வந்து கொண்டிருந்த, வடக்கு ஒன்றியத்தில், தற்போது 50 சதவீத பயனாளிகளே ஊரக வேலையுறுதித்திட்ட வேலைக்கு வருகின்றனர். மற்றவர்கள் விவசாய வேலையை நாடி சென்றுள்ளனர் என அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

**தென்னந்தோப்பில் கர்நாடக அதிகாரிகள் ஆய்வு**

பொள்ளாச்சி, : பொள்ளாச்சியை அடுத்த தப்பட்டைகிழவன் புதூரில் உள்ள ஒரு விவசாயிக்கு சொந்தமான தென்னந்தோப்பில், கர்நாடக அரசின் வரித்துறை அதிகாரி சம்பு தயாளமீனா, தோட்டக்கலைத்துறையை சேர்ந்த ராஜ்பதிசாமி ஆகியோர் நேற்று, ஆய்வு மேற்கொண்டனர். அங்குள்ள தென்னைகளில் நிரா எனப்படும் பதநீர் இறக்கி அதனை எதற்கெல்லாம் பயன்படுத்தப்படுகிறது என்பது குறித்தும், அதன் மூலம் விவசாயிகளுக்கு என்ன லாபம் குறித்தும் ஆய்வு மேற்கொண்டு கேட்டறிந்தனர். அப்போது விவசாயிகள் கூறுகையில், ‘தென்னையிலிருந்து இறக்கப்படும் பதநீரை கொண்டு அச்சுவெல்லம்,

தேன், கருப்பட்டி உள்ளிட்ட பல்வேறு பொருட்கள் தயாரிக்கப்படுகின்றன. இதன் மூலம் ஓரளவு வருவாய் உண்டாவதாகவும். இந்த தொழில் மூலம் தென்னை தொழிலாளர்கள் பலருக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்துவதாகவும்' விளக்கம் அளித்தனர். இந்த ஆய்வின் போது கொச்சின் தென்னை வளர்ச்சி வாரிய துணை இயக்குனர் ஹேமாசந்திரன், தென்னை வளர்ச்சி வாரிய அலுவலர் பரமசிவம் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**கோடை உழவு, மண் ஆய்வு செய்து உரமிட்டு அதிக மகசூல் பெறலாம்**

விவசாயிகளுக்கு வேளாண் அதிகாரி யோசனை

பெரம்பலூர்: விவசாயிகள் கோடை மழையை பயன்படுத்தி கோடை உழவு மற்றும் மண் ஆய்வு செய்து உரமிட்டால் அதிக மகசூல் பெறலாம் என விவசாயிகளுக்கு வேளாண் இணை இயக்குனர் யோசனை தெரிவித்துள்ளார். பெரம்பலூர் மாவட்ட வேளாண் இணை இயக்குனர் (பொ) அய்யாசாமி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு : பெரம்பலூர் மாவட்டத்தில் தற்போது கோடை மழை பெய்து வருகிறது. கோடை மழையை பயன்படுத்தி வயலை உழுதால் மண்ணிற்கு சிறந்த பயனைத்தரும். இதன் மூலம் மண்ணின் நீர்ப்பிடிப்புத் தன்மை அதிகரித்து மண்ணில் நீர் உறிஞ்சப்படுகிறது. மேலும், உழவு செய்யும்பொழுது மேல்மண், கீழாகவும், கீழே உள்ள மண்மேலாக வரும்பொழுது சாகுபடி செய்யும் பயிர் செழிப்புடன் வளர வாய்ப்புள்ளது. மண்ணில் உள்ள கூட்டுப்புழுக்கள் மேற்பரப்பிற்கு வரும்பொழுது பறவைகள் மூலம் அழிக்கப்படுவதன் மூலம் பூச்சித்தாக்குதல் கட்டுப்படுத்தப்படுகிறது. கோடை உழவுக்குப்பிறகு பயிர் சாகுபடி மேற்கொள்வதற்கு முன்பாக மண் மாதிரி எடுத்து ஆய்வுசெய்து சாகுபடி மேற்கொள்வதன் மூலம் பயிருக்குத் தேவையான அளவு உரத்தை மட்டும் இட்டு சாகுபடி செலவை குறைக்க வாய்ப்புள்ளது.

இதற்காக நாளை (21ம் தேதி) லாடபுரம்(கி) மற்றும் லாடபுரம்(மே),

22ம்தேதி களரம்பட்டி மற்றும் அம்மாபாளையம், 26ம்தேதி வேலூர், 27ம்தேதி பொம்மனப்பாடி மற்றும் சத்திரமனை, 28ம் தேதி குரும்பலூர்(தெ), 29ம் தேதி எசனை மற்றும் கீழக்கரை ஆகிய பகுதிகளுக்கு நடமாடும் மண்பரிசோதனைக்கூட வாகனம் மூலம் அதிகாரிகள் மண் மாதிரிகள் ஆய்வு மேற்கொள்ள வருகை தர உள்ளனர். அப்போது அனைத்து விவசாயிகளும் தங்களது வயலில் மண் மாதிரிகளை சேகரித்துவந்து கட்டணமாக ரூ. 20ஐ செலுத்தி மண் ஆய்வு செய்து, அதன்படி உரங்கள் அளவோடு இட்டு சாகுபடி மேற்கொண்டு அதிக லாபம் பெற்று பயனடைய வேண்டும் என மாவட்ட வேளாண் இணை இயக்குனர் தெரிவித்துள்ளார்.

**விச்சந்தாங்கல் அரசு தோட்டக்கலை பண்ணைக்கு தரமான சுற்றுச்சுவர்** அமைப்பு

காஞ்சிபுரம், : தினகரன் செய்தியைத் தொடர்ந்து, விச்சந்தாங்கல் அரசு தோட்டக்கலை பணியில், சுற்றுச் சுவர்களுக்கான கட்டுமானப் பணி தரமாக கட்டி முடிக்கப்பட்டது.காஞ்சிபுரம், உத்திரமேரூர் சாலையில் உள்ளது விச்சந்தாங்கல் கிராமம். இது களக்காட்டூர் ஊராட்சிக்கு உட்பட்டது. விச்சந்தாங்கல் கிராம எல்லையில் 55 ஏக்கர் பரப்பளப்பில் அரசு தோட்டக்கலை பண்ணை இயங்கி வருகிறது. இங்கு பூச்செடிகள், பழவகை செடிகள், நிழல் தரும் மரக்கன்றுகள் மற்றும் அழகு செடிகள் உற்பத்தி செய்யப்பட்டு, விவசாயிகள் மற்றும் பொதுமக்களுக்கு மானிய விலை மற்றும் குறைந்த விலைகளில் விற்கப்பட்டு வருகிறது. இதுதவிர இதன் வளாகத்தில் பட்டு பூச்சு வளர்ப்பு மையமும் செயல்பட்டு வருகிறது. விச்சந்தாங்கல் அரசு தோட்டக்கலை பண்ணையை மேம்படுத்தும் வகையில், கடந்தாண்டு அரசு சார்பில் ஒரு கோடி ரூபாய் நிதியை ஒதுக்கியது. இதில், அலுவலகத்திற்கான புதிய கட்டிடம், சுற்றுச்சுவர், திறந்த வெளிக்கிணறு உள்ளிட்ட பல்வேறு பணிகள் நடந்து வருகிறது.

சுற்றுச்சுவர் அமைக்கும் பணி தரமற்ற முறையில் கட்டப்பட்டு வந்தது. தேவையான அளவு சிமென்ட் சேர்க்கப்படாததால், ஒரு சில தினங்களிலேயே சுவர் சரிந்து விழுந்தது. இதை பார்த்த விச்சந்தாங்கல் கிராம மக்கள், சுற்றுச் சுவர்கள் அமைக்கும் பணியை தடுத்து நிறுத்தனர். இதுகுறித்து, தினகரன் நாளிதழில் கடந்த 4ம் தேதி படத்துடன் செய்தி வெளியிடப்பட்டது. இதன் எதிரொலியால், மாவட்ட நிர்வாக அலுவலர்கள், வேளாண்மைத் துறை அதிகாரிகள், விச்சந்தாங்கல் அரசு தோட்டக்கலை பண்ணையில் நடந்து வரும் கட்டுமானப் பணிகளை நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டனர். தரமற்ற முறையில் கட்டப்பட்டிருந்த சுற்றுச் சுவர்களை இடித்து தள்ளிவிட்டு, தரமான முறையில் புதிய சுற்று சுவர்களை அமைக்க உத்தரவிட்டனர். இதைத் தொடர்ந்து, அதிகாரிகள் முன்னிலையில் தரமாகவும், உறுதியாகவும் சுற்றுச்சுவர்கள் கட்டி முடிக்கப்பட்டது. இதன் மேற்பகுதியில் கம்பி வேலியும் அமைக்கப்பட்டது.

**திருவண்ணாமலை மாவட்டத்தில் பலத்த மழை**

திருவண்ணாமலை: திருவண்ணாமலையில் வழக்கமாக மே மாதத்தில் வெயில் கடுமையாக இருக்கும். ஆனால் இந்த ஆண்டு ஏப்ரல் மாதமே வெயில் சுட்டெரிக்க தொடங்கிவிட்டது. அக்னி நட்சத்திரம் ெதாடங்கிய கடந்த 4 தேதி முதல் வெயில் 102 டிகிரி வரை கடுமையாக காணப்பட்டது. அவ்வப்போது மழை பெய்து வந்தாலும் வெயிலின் தாக்கம் குறையவில்லை. இதனால் பொதுமக்கள் அவதிப்பட்டு வந்தனர். இந்நிலையில் நேற்று முன்தினம் காலை முதல் வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. அவ்வப்போது வெயில் அடித்தது. மாலை 5.30 மணியளவில் கருமேகங்கள் திரண்டு பலத்த காற்று வீசியது. சிறிது நேரத்தில் இடி, மின்னலுடன் கூடிய பலத்த மழை பெய்ய தொடங்கியது.

சுமார் 2 மணிநேரம் பெய்த பலத்த மழையில் அறிவொளி பூங்கா, அவலூர்பேட்டை சாலை, கடலைக்கடை சந்திப்பு, பெரியார் சிலை, காந்தி சிலை, காந்திநகர் போன்ற தாழ்வான பகுதியில் மழைநீர் வெள்ளம்போல் பெருக்கெடுத்து ஓடியது. பின்னர் இரவு முழுவதும் மழை தூறியபடி இருந்தது. இதானல் வெப்பம் தணிந்து குளிர்ந்த காற்று வீசியது. இந்த கோடை மழைக்காரணமாக விவசாயிகள் குறுவை சாகுப்படிக்கான பணிகளை தொடங்கியுள்ளனர். நிலத்தடி நீர்மட்டமும் வேகமாக உயர்ந்து வருவதால் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். இதேபோல் மாவட்டம் முழுவதும் பரவலாக பலத்த மழை பெய்தது. ஆரணியில் அதிக பட்சமாக 80.8 மி.மீ மழை பதிவானது. திருவண்ணாமலை-51மி.மீ, செய்யாறு-6.6மி.மீ, வந்தவாசி-11மீ.மீ, சாத்தனூர் அணை-14.8மி.மீ, போளூர்-56.2மி.மீ, செங்கம்-22.7மி.மீ. மழை பதிவானது.

**கறம்பக்குடி பகுதியில் உள்ள வேளாண் நிலங்களில் ஆழ்துளை கிணறு**

கறம்பக்குடி: புதுக்கோட்டை மாவட்டம், கறம்பக்கோட்டையில் பெரியார் அம்பேத்கர் மக்கள் கழகம் சார்பில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. வள்ளுவர் திடலில் நடைபெற்ற இப்பொதுக்கூட்டத்துக்கு தங்க தனபால் தலைமை வகித்தார். மாவட்ட அமைப்பாளர் சோம சண்முகம், சுதாகர், முருகேசன் ஞானப்பிரகாசம், ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாநில அமைப்பாளர் தமிழினியன், துரை பெரியசாமி, கரிகாலன் உள்ளிட்ட நிர்வாகிகள் சிறப்புறையாற்றினர்.தீர்மானங்கள்: புதுக்கோட்டை மாவட்டத்தில் அரசுக்கு சொந்தமான சமூகக் காடுகள், மேய்ச்சல் தரிசு நிலங்களை கூட்டுப் பண்ணை திட்டத்தின் கீழ் கொண்டுவர வேண்டும். வம்பன், குடுமியான்மலை, வெள்ளாளவிடுதி பகுதிகளில் உள்ள வேளாண் பண்ணைகளில் பாரம்பரிய விதைகளை உற்பத்தி செய்ய வேண்டும். கடுக்காகாடு, மாங்கோட்டை, பிலாவிடுதி, மைலன்கோன்பட்டி, பந்துவாக்கோட்டை போன்ற கிராமங்களில்

வேளாண் பயன்பாட்டுக்காக ஆழ்துளை கிணறு அமைத்து கொடுக்க வேண்டும். இதே போல், கறம்பக்குடி வட்டாரத்தில் உள்ள கோயில் நிலங்களிலும் ஆழ்துளை கிணறு அமைத்து கொடுக்க வேண்டும். உழைக்கும் மக்களை ஒரே குடையின் கீழ் ஒன்றிணைக்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. முடிவில் பந்துவக்கோட்டை சக்தி நன்றி கூறினார்.

**விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம்**

திருவள்ளூர், : திருவள்ளூர் மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் வரும் 22ம்தேதி காலை 11 மணிக்கு திருவள்ளூர் கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் நடக்கிறது. கலெக்டர் வீரராகவராவ் தலைமை வகிக்கிறார். வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை, வருவாய்த்துறை, மின்வாரியம், கூட்டுறவுத்துறை, பொதுப்பணித்துறை, வேளாண்மை பொறியியல் துறை, மீன்வளத்துறை, கால்நடை பராமரிப்புத்துறை, வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை மற்றும் இதர வேளாண் சார்ந்த துறை அலுவலர்கள் கலந்து கொண்டு விவசாயிகளின் குறைகளுக்கு தீர்வுகாண உள்ளனர். எனவே, விவசாயிகள் மேற்படி கூட்டத்தில் தவறாது கலந்து கொண்டு பயன்பெறும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இவ்வா.று அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**சித்திரை பட்ட உளுந்தை மழையிலிருந்து காக்கும் வழிமுறை** வேளாண்மை அதிகாரி விளக்கம்

திருக்காட்டுப்பள்ளி: தஞ்சாவூர் மாவட்டம் பூதலூர் வட்டாரத்தில் திருக்காட்டுப்பள்ளி, ஒன்பத்துவேலி, விஷ்ணம்பேட்டை, தீட்சசமுத்திரம், கூத்தூர், அலமேலுபுரம், அகரப்பேட்டை, திருச்சென்னம்பூண்டி, பழமார்நேரி உள்ளிட்ட கிராமங்களில் சித்திரை பட்ட இறவை உளுந்து சாகுபடி செய்யப்பட்டு பூக்கும் பருவம் வரை உள்ளது. இந்நிலையில் தற்போது பெய்த மழையால் தேங்கியுள்ள நீரை

முழுவதுமாக வடிக்க வேண்டும். ஒரு ஏக்கருக்கு 4 கிலோ டிஏபி உரத்தை 20 லிட்டர் தண்ணீரில் முதல்நாளே ஊறவைத்து மறுநாள் வடிகட்டி தெளிவை எடுத்து இத்துடன் 180 லிட்டர் தண்ணீர் சேர்த்து கைத்தெளிப்பான் மூலம் மாலையில் பூக்கும் தருணத்தில் ஒருமுறை, 15 நாட்கள் கழித்து ஒருமுறை தெளிக்க வேண்டும். அல்லது யூரியா பாஸ்பேட் 17: 44: 0 உரத்தை ஏக்கருக்கு ஒரு கிலோ வீதம் 100 லிட்டர் தண்ணீரில் கரைத்து உளுந்து பயிர் நன்றாக நனையுமாறு தெளிக்க வேண்டும். இதனால் பூக்கள் உதிர்வது குறைந்து காய் பிடிக்கும் திறன் அதிகரித்து மகசூல் கூடும். இவ்வாறு பூதலூர் வேளாண்மை உதவி இயக்குநர் பிரபாகர் தெரிவித்துள்ளார்.

**மதகடிப்பட்டு சந்தையில் சண்டைசேவல், முயல் விற்பனை**

திருபுவனை, : மதகடிப்பட்டு மாட்டுச்சந்தைக்கு முதன்முறையாக விற்பனைக்கு வந்திருந்த சண்டைக்கோழிகள், முயல்களை பொதுமக்கள் ஆர்வமுடன் வாங்கி சென்றனர். புதுச்சேரிவிழுப்புரம் தேசிய நெடுஞ்சாலையில் உள்ள மதகடிப்பட்டு மாட்டுச்சந்தை மிகவும் பிரபலம். சுமார் 50 ஆண்டுகளுக்கும் மேலாக செவ்வாய்கிழமைகளில் மாட்டுச்சந்தை நடந்து வருகிறது. புதுவை மாநிலம் மட்டுமின்றி திருவண்ணாமலை, செஞ்சி, ஈரோடு, சேலம், திருச்சி உள்பட தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் மாடுகள் விற்பனைக்கு வருவது வழக்கம். இதையொட்டி மாடுகளுக்கான மூக்கணாங்கயிறு, லாடம், மணி மற்றும் அலங்கார பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றன. சமீப காலமாக பல்வேறு பொருட்களின் விற்பனை மையமாகவும், மாட்டுச்சந்தை மாறி வருகிறது. குறிப்பாக கருவாடு, ஜவுளி உள்ளிட்ட பொருட்களும் விற்கப்படுகிறது. விவசாயிகளும் சீசனுக்கு தகுந்தாற்போல வேர்கடலை, பலாப்பழம், மாம்பழம் மற்றும்

நவதானிய விதைகள் உள்ளிட்டவற்றை விற்பனைக்கு எடுத்து வருகின்றனர்.

நேற்று காலை மாட்டுச்சந்தை கூடியபோது ஆயிரத்துக்கும் மேற்பட்ட காளைமாடுகளும், வழக்கத்துக்கு மாறாக பசுமாடுகளும் விற்பனைக்கு வந்தன. வண்டி மாடுகள் ஜோடி ரூ.30 ஆயிரத்தில் இருந்து 50 ஆயிரம் வரையும், கறவை மாடு ஒன்று ரூ.15 ஆயிரம் வரையும் விற்பனையானது. மேலும் புதுவரவாக சண்டைச்சேவல்களும், முயல்களும் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து கொண்டுவரப்பட்டிருந்தன. சண்டை சேவல்கள் ஜோடி ரூ.300 முதல் ரூ.400 வரையும், முயல்கள் ஜோடி ரூ.200 முதல் 300 வரையும் விற்பனை செய்யப்பட்டது. தற்போது பல்வேறு கிராமங்களில் சேவல்சண்டை பிரபலமடைந்து வருவதால் இளைஞர்கள் பலர் சண்டைச்சேவல்களை ஆர்வமுடன் வாங்கிச்சென்றனர். வண்டி மாடுகள், காளைமாடுகள், பசுக்கள், சண்டைச்சேவல்கள், முயல்கள் என மதகடிப்பட்டு சந்தை நேற்று களைகட்டியது. இதன் காரணமாக டீக்கடை, ஓட்டல்களில் விற்பனை களை கட்டியது.

**திண்டுக்கல் துடைப்பம் புதுவையில் விற்பனை**

புதுச்சேரி, : திண்டுக்கல்லில் இருந்து கொண்டுவரப்பட்ட தென்னந்துடைப்பம் புதுச்சேரியில் விற்பனை செய்யப்படுகிறது. திண்டுக்கல் அடுத்த விஎஸ்கே புதுப்பட்டி கிராமம், அதனை சுற்றியுள்ள பகுதிகளில் அதிகளவில் தென்னைமரங்கள் உள்ளது. இதன்காரணமாக தென்னையில் இருந்து தயாரிக்கப்படும் கயிறு, தென்னமட்டை, துடைப்பம் ஆகியவற்றை ஊர், ஊராக சென்று விற்பனை செய்து வருவதை சில குடும்பங்கள் குடிசைத்தொழிலாக செய்து வருகின்றனர். இதுகுறித்து புதுச்சேரி வனத்துறை அலுவலகம் அருகே சாலை ஓரத்தில் துடைப்பம் விற்பனை செய்து வரும் பொன்னுத்தாயி கூறுகையில், 2 மாதத்துக்கு ஒருமுறை புதுச்சேரிக்கு வருகிறோம். தற்போது சுமார் 3

ஆயிரம் துடைப்பங்களை கொண்டுவந்துள்ளோம். ஜோடி துடைப்பம் ரூ. 50க்கு விற்பனை செய்கிறோம். விலை குறைவாக இருப்பதால் பலர் ஆர்வமுடன் வாங்கி செல்கின்றனர். இரண்டு நாட்களில் 2 ஆயிரம் துடைப்பங்களை விற்பனையாகியுள்ளது. 5 நாட்களில் அனைத்தையும் விற்றுவிடுவொம்.இது போன்று எங்கள் ஊரை சேர்ந்த சிலர் பல பகுதிகளுக்கு சென்று தென்னை பொருட்களை விற்பனை செய்து வருகின்றனர். என்னதான் மொசைக், டைல்ஸ் என வீட்டின் தரை மாறினாலும், வீட்டுக்கு வெளியே தென்னந்துடைப்பம்தான் பயன்படுகிறது. என்றார்.